ஸ்ரீ சோலிணி.

5/14
3-55

V52 1Y7m8
1 N55

# முசோலினி

V. சிவப்பிரகாசம் B. A.,

நீலா நிலையம்
செரி ரோட், சேலம்.

முதற் பதிப்பு: மே, 1955

109049

விலை ரூ 0-10-0

உரிமையுடையது

லிபர்டி பிரிண்டர்ஸ்
27, செரி ரோட், சேலம்

# நண்பர்களுக்கு

நாகரிகம் தோன்றிய நாடு — வீரர்கள் உலவிய மண்விவேகி களைப் பெற்றெடுத்த தாயகம் என்று இத்தாலி அழைக்கப் படுகிறது. அந்த நாட்டின் மேன்மைக்கு உழைத்தவர்கள் பலர் அறிஞர்கள், அரசியல் ஞானிகள் என்று போற்றப் படு கிறார்கள். முசோலினி அவர்கள் வரிசையிலே வைத்து எண்ணப் படுபவர் அல்ல கொடியவன் — கொலை நோக்கம் கொண்டவன் என்று எழுத்தாளர்கள் அவரை அழைக்கிறார் கள். நான் அவரை நல்லவர் என்று கூறவில்லை.

நல்லவர்கள், நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு உழைத் தவர்கள் என்போரின் வாழ்க்கையைப் படிப்பதில் பொது மக்கள் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றனர். வாழ்க் கையில் வெற்றி கண்டவர்கள் மட்டுமே உலகில் வாழவில்லை தோல்வி கண்டவர்களும் வாழ்ந்திருக்கிறார்கள். தோல்வி அடைந்த மனிதனின் வாழ்க்கை வெற்றி வீரர்களின் வாழ்க் கைக்கு முரண்பட்டது. இந்த முரண்பாடு ஏன் ஏற்பட்டது என்பதை மக்கள் உணர வேண்டும். சமுதாயம் அவர்கள் வரலாற்றைத் தெரிந்து கொள்ள முன் வந்தால் சமுதாயத் திலே முசோலினி போன்றவர்கள் மீண்டும் தோன்ற மாட் டார்கள். அந்த நோக்கத்துடன் தான் நான் இதை எழுதியி ருக்கிறேன்.

உலகின் போற்றுதலுக்கு உரிமை பெற்றவர்களின் வாழ்க் கையையே படித்துள்ள நீங்கள் — தோல்வியைத் தழுவிய முசோலினியின் வாழ்க்கையையும் படித்துப் பாருங்கள் — பயன் பட்டால் மகிழ்வேன்.

இந்த நூலை எழுதுவதை விட அதை வெளியிட முன்வர மிகவும் உறுதித்தேவை. தமிழ் நாட்டின் நூல் உலகின் நிலை அப்படி மாறியிருக்கிறது. நல்ல நம்பிக்கையுடன் இதை சேலம் நீலா நிலையத்தார் வெளியிட முன் வந்திருக்கிறார்கள் அவர்களுக்கு என் நன்றி. அத்துடன் உங்கள் ஆதரவும் கிடைக்குமென்று நம்புகிறேன்.

சேலம்
1–5–55

அன்பன்
V. சிவப்பிரகாசம்

# பதிப்புரை

சிந்தனைச் செல்வர் V. சிவப்பிரகாசம் B. A. அவர்களை தமிழ்ப் புத்தக உலகு நன்கு அறியும் அவர் எழுதிய துருக்கியின் தந்தை யைப் பற்றி தமிழகத்துப் புத்திரிகைகள் ஏக மனதாகப் பாராட்டி எழுதின. அவரின் எழுத்துக்களில் ஆடம் பரமிருக்காது — கருத்தாழம் மிகுந்திருக்கும்.

தோழர் சிவப்பிரகாசத்தின் எழுத்து வன்மைக்கு மேலும், ஓர் எடுத்துக்காட்டாகவே 'முசோலினி' வெளிவருகிறது 'முசோலினி' யின் வாழ்க்கை — ஓர் தோல்வி வாழ்க்கை தான்! என்றாலும் முசோலினியின் வாழ்க்கையிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ளவேண்டிய செய்திகள்', ஏராளம் உண்டு. அந்தச் செய்திகளை இச்சிறிய நூலாகிய முசோலினி' உங்களுக்கு எடுத்துச் சொல்லும்.

'முசோலினி' புத்தக உரிமையை எங்களுக்கு அளித்த சிந்தனைச் செல்வர் சிவப்பிரகாசம் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சேலம்
1–5–55

நீலா நிலையத்தார்

# முசோலினி

## கொள்கை

கொள்கை, கோட்பாடு, குறிக்கோள், தத்துவம் இச் சொற்கள் அனைத்தும் மனிதனுடைய வாழ்வில் பெரும் பங்கு கொள்ளுகின்றன. கொள்கை வீரர்கள் என்று அழைக்கிறோம். புதிய கோட்பாடு ஒன்றை இப்பாருலகுக்கு அளித்தவன் என்று அழைத்துப் பாராட்டுகிறோம். குறிக்கோளுக்காக வாழ்ந்தவன், எத்துணை இடுக்கண்கள் நேர்ந்த போதிலும் தான் தன்னுடைய குறிக்கோளை அடைய உயிரையே தியாகம் செய்யத் தயாராக உள்ள உத்தமன் என்று ஒருவரைப் போற்றுகிறோம். "புதிய தத்துவம் இது. இப்புவியில் இதுநாள்வரை எத்தனையோ பேர் தங்கள் கருத்துக்களைச் சொல்லிப் போயினர். உலகம் அவர்களில் பலரை மறந்துபோயிற்று. ஆனால் இப் புதிய தத்துவத்தை நமக்கு அளித்த மேதையை நாம் என்றுமே மறந்துவிடாது அவரை நினைவில் வைத்துக் கொள்ளுவோமாக" -இப்படிப் பேசுவதைக் கேட்டிருக்கிறோம்.

"கொள்கையில்லாத கூட்டத்தினர், குறிக்கோளின்றி வாழும் மனிதன், எவ்விதக் கோட்பாட்டிற்கும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாத கொடியவன். அவன் வாழ்க்கையைச் சீர்திருத்திக் கொள்ள அவனுக்கு நல்லதோர் தத்துவம் ஒன்றை அவன் பிறந்த சமுதாயம் தந்திருக்கிறது என்றாலும் இன்று அவன் வாழ்க்கை என்பது பெருங்கடல் போன்றது. அளவிட முடியா ஆழம் கொண்டதுமன்னி

யில் தாண்ட முடியாது தன்னகத்தே பல திமிங்கலங்களைக் கொண்டது'' – இப்படிப் பேசுவதையும் நாம் கேட்டுள்ளோம்.

மனிதன் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்தான் ஒருகாலத்தில். அப்போதும் அவனிடையே கொள்கை ஒன்று காணப்பட்டது. 'நான் மட்டும் உயிர்வாழ வேண்டும். இவ்வுலகில் உள்ள இன்பங்கள் அனைத்தையும் நானே அனுபவிக்க வேண்டும். சுய நலம் என்று நாம் இப்போது அவனது குறிக்கோளுக்குப் பெயரிடலாம். ஆனால் அதுவும் ஒரு கொள்கை தான். இன்று அவன் கொள்கை சரியல்ல என்று நாம் வாதிக்கத் தேவையில்லை.

காட்டு மிராண்டிகளாய்த் திரிந்த மனித இனம் காலப் போக்கினால் கொஞ்சம் கட்டுப்பாட்டிற்குள் நடக்கத் துவங்கியது. 'என் குடும்பம் தான் உலகில் உயர்ந்த குடும்பம். அதன் வாழ்வு மலரவேண்டும். என் குடும்பம் விருத்தியடைய வேண்டும்.' இது அப்போது நிலவிய கொள்கை. குடும்ப பாசம் என்று அழைக்கிறோம். மனித இனம் அப்போது குடும்பம் குடும்பமாக வாழ்ந்தது. அங்கே தனி மனிதனுடைய சுயநலக் கொள்கை ஆதிக்கம் செலுத்தவில்லை. யாருடைய குடும்பம் உயர்ந்தது? எந்தக் குடும்பத் தலைவன் திறமை பெற்றவன் என்பது போன்ற கேள்விக் குறிகள் அங்கே தோன்றின. குடும்ப பாசத்தால் தன் உடன் பிறந்தோரின் வாழ்வுக்காக மனிதன் உழைத்தான். அதுவும் ஒரு கொள்கை தான்.

காலம் மாறியது. குடும்பம் குடும்பமாக வாழ்ந்த மனித இனம் சமுதாயமாக மாறியது. சமுதாய நீதி, சமூக அந்தஸ்து, சமூகத் தலைவர்கள், சமூக ஊழியர்கள், சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகள் இவை அனைத்தும் தோன்றின.

சமுதாயத்தில் உயர்ந்தோர் யார், வாழப்பிறந்தோர் யார், சமூக ஏணியின் முதற் படியிலேயே நின்று விட வேண்டியவர்கள் யார் என்ற கேள்விக் குறிகள் தோன்றின. தனி மனிதனுடைய சுயநலக் கொள்கை அங்கே மறைந்து போகவில்லை. தனி மனிதர்கள் — அவர்களது குடும்பங்கள் சேர்ந்து வாழும் அமைப்பு தான் சமுதாயம். அதிலே தனி மனிதனின் கௌரவம் குன்றிப் போவது கிடையாது. குடும்ப வாழ்க்கையும் மறைந்து போவதில்லை. என்றாலும் அவர்கள் வாழ்வில் ஒரு கட்டுப்பாடு உண்டாகிறது. சமுதாயத்தில் ஒரு அங்கமாக விளங்கும் தனி மனிதன் தன் வளர்ச்சிக்காக, தன் வாழ்வை வளமுள்ளதாக்க, தன் உழைப்பின் பயனைத் தானே அனுபவிக்க, தன் மகிழ்ச்சியில் மற்றவர்களுடன் பங்குகொள்ள அதே போல் மற்றவர்களுடைய துன்பத்திலும் பங்கு பெற உரிமை பெற்றிருக்கிறான். தனி மனிதன் தன் உரிமையின் எல்லைக் கோட்டினைத் தாண்டிச் செல்ல முயலும் போது தான் சமுதாயத்தில் அந்த நபரால் கேடுவிளைகிறது, கொடுமை நிலவுகிறது. இப்படி மனித சமுதாயம் உயர்ந்ததாக எத்தனைபோ பெரியோர்கள், மகான்கள் எனப்படுவோர் பல கொள்கைகளை, மாறுபட்ட தத்துவங்களைச் சொல்லிப் போனார்கள்.

உலகெலாம் அன்புமயம். உலகில் பிறந்தவர்கள் அனைவரும் அதிலே வாழப் பிறந்தவர்கள். மனிதன் தன் கடமையைச் செய்ய வேண்டும், அதன் பலனை எதிர்பார்க்கக் கூடாது. உன்னை ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை திருப்பிக் காட்டுவாயாக. இயேசுபிரான் என்று இருந்தவர்கள் அன்புடன் அழைக்கின்றவரின் கொள்கை இப்படிப்பட்டது தான். உலகம் இன்று அக் கொள்கையை 'உபதேசம்' என்று பெயரிட்டு அதற்கு மதம் என்று முலாமைப் பூசி விட்டது.

அன்பு தான் அனைத்தையும் வெல்லும். ஆசை நில்லாது. மனிதன் பஞ்சமாபாதகங்களை விட்டொழிக்க வேண்டும் என்று சொன்னார் கபிலவஸ்துவின் அதிபர் சுத்தோதனர். அவருக்குப் புத்தர் என்று பட்டம் ஏற்பட்டது. புத்த மதம் தோன்றியது.

உலகில் ஒரே ஒருவர் தான் உயர்ந்தவர். எல்லாம் அவரது படைப்பு தான்; நம் எல்லோருக்கும் அதிபரான அவரை நாம் வணங்கக் கடமைப் பட்டிருக்கிறோம் என்று கூறிய மெக்கா நகரத்து அறிஞர் மகமதுவின் சொற்களும் உலகில் இன்று மதம் என்ற பட்டியலில் சேர்ந்திருக்கிறது. மதம் என்று பெயரிட்டழைக்கப்பட்டாலும் அவைகளும் கொள்கை என்ற சொல்லின் பொருளுக்கு உட்பட்டவை தான்.

ஆனால் சமூகத்தின் அன்றாட வாழ்க்கைக்காக உள்ள கொள்கைகள் அரசியல் தத்துவங்கள் என்று அழைக்கப் படுகின்றன. நாட்டுமக்களின் அதிபன் மன்னனானவன். மன்னவன் கடவுளின் பிரதிநிதி. மக்களை ஆள்வதற்காகவே கடவுளால் அனுப்பப்பட்டவன். குடிமக்கள் அனைவரும் மன்னர் பிரானுக்கு வரி செலுத்த வேண்டும் மன்னர் பெருமான் தன் மகிழ்ச்சிக்காகவும் தன் குடிமக்களின் உயர்வுக்காகவும், அவன் மகுட மேந்தியிருக்தும் நாட்டின் மேன்மைக்கும் மன்னவனை இந்த மண் பகுதியைக் காக்கு மாறு அனுப்பிய தேவனின் கட்டளைப்படி செங்கோலேந்தி நீதி தவறாது ஆட்சி புரிவான். இது ஒரு கொள்கை. முடி யாச்சி என்று அழைக்கிறோம். அரசியல் அலைகள் சமுதாயத் தில் நன்றாக வீச ஆரம்பித்த பிறகு உலக சரித்திரத்தில் காணப்படும் முதல் அரசியல் கொள்கை முடியாட்சி முறை தான்.

வாழ்க்கைக்குத் தேவையானது செல்வம். அச் செல் வம் யாரிடம் மலைபோல் குவிந்து கிடக்கிறதோ, யாருடைய

இல்லத்தில் செல்வம் அடிமையாகி அவனது மூலதனமாக இருக்கின்றதோ, அவன் தான் வாழப்பிறந்தவன், மற்றோரெல்லாம் அவன் அடிமைகள் என்று பேசப்பட்ட காலம் ஒன்று இருந்தது. பிரபுத்துவமுறை என்று இக்கொள்கைக்குப் பெயரிட்டனர்.

மக்களுடையது தான் நாடு. அதன் ஆட்சியும் அவர்களுடையது தான். நமது தேவை என்ன நாமே நிர்ணயித்துக் கொள்வோம். நமது வாழ்வு, நமது வீழ்ச்சி அனைத்துக்கும் நாமே தான் பொறுப்பாளர்கள். ஆகவே ஆட்சி என்பது மக்களுக்காக, மக்களால், மக்களுடையதாக இருப்பதுதான் சரி என்று ஒரு காலத்தில் கூறப்பட்டது. அக்கொள்கை தான் ஜனநாயகம் என்று அழைக்கப்படுகிறது.

உழைப்புக்கேற்ற ஊதியம் வேண்டும். உழைக்காது இவ்வுலகில் யாரும் உல்லாச வாழ்வு பெறக்கூடாது. உழைப்புக்கேற்ற ஊதியம் தேவை. உலகின் மூலதனம் அனைத்தும் ஆட்சியின் சொத்து என்ற முழக்கம் சென்ற நூற்றாண்டில் கேட்கத் துவங்கியது. சோஷியலிசம், பொது உடைமைத் தத்துவம் என்று அக்கொள்கைக்கு உலகம் பெயரிட்டுள்ளது.

நாட்டில் பிறந்தோர் அனைவரையும் காக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்ற அளவு உழைத்து தனக்குரியபங்கை ஆட்சிக்குச் செலுத்தவேண்டும். அது போலவே அரசாங்கம் அந்த மனிதனின் தேவைக்கு ஏற்ற ஊதியத்தை அளிக்க வேண்டும். சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற ஊதியம். அந்த ஊதியத்தைத் தரவும், உழைப்பைப் பெறவும் உள்ள அமைப்பு தான் அரசாங்கம் இப்படியாக ஒரு கொள்கை தோன்றியது. கம்யூனிசம் என்று பெயரிட்டு அக்கொள்கை அழைக்கப்படுகிறது.

## பாசிசம்

நாம் இங்கே இத்தாலியின் அதிபன் முசோலினியின் வாழ்க்கை வரலாற்றைப் பார்க்கிறோம். பெனிடோ முசோலினி உலகத்துக்கு ஒரு கொள்கையைச் சொல்லிப் போனார். பாசிசம் என்ற பெயரில் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றி அக்கொள்கையைச் சொன்னவரின் உடல் மறைந்தவுடன் மக்கள் மன்றத்தில் மதிப்பிழந்து போன கொள்கை அது நாசிசம் பாசிசம். அரசியல் சரித்திரத்தில் கருப்புக் காகிதத்தில் எழுத வேண்டியவை. நாசிசத்தின் சிலமுறைகள் பாசிசத்துடன் ஒத்து வரும். அதே போல் பாசிசத்தில் சிலமுறைகள் நாசிசத்துடன் ஒத்துவரும். ஆனால் இரண்டும் இரு பெரிய தத்துவங்கள். தனித்தனியான தத்துவங்கள். தனி மனிதர்களால் சொல்லப்பட்டு. அவர்கள் கையில் சிக்கி இருந்த அதிகாரமென்ற துப்பாக்கி விடுபட்டதும் உலக ஏட்டில் தன் கதையை முடித்துக்கொண்ட தத்துவங்கள். பாசிசம் என்று சொல்லும்போது முசோலினியின் நினைவுவரும். முசோலினி என்று சொல்லுங்கள் பாசிசம் என்ற சொல் உங்கள் முன்வந்து நிற்கும். மலரிலிருந்து மணத்தைப் பிரித்து எடுக்கலாம் ஆனால் முசோலினி என்று தனியாகப் பிரித்துப் பேச முடியாது பாசிசம் என்ற கொள்கை ஒன்றைச் சொன்னதால் முசோலினிக்குப் பெயர் ஏற்பட்டதா? அல்லது முசோலினியினால் உண்டாக்கப் பட்டதால் பாசிசம் என்ற கொள்கைக்கு உலகில் மதிப்பு ஏற்பட்டதா? இவை இரண்டுமே மிகவும் சிக்கலான கேள்விகள். இத்தாலியின் அரசியல் வானில் மின்னல் போல் தோன்றி மறைந்து போனார் முசோலினி. ஆம், உலகம் அந்தப் போர் வீரனை மறந்து கொண்டேவருகிறது. இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இத்தாலியில் பிறந்தவர்கள் எத்தனையோ பேர்

உலகம் புகழும் வண்ணம் வாழ்ந்திருக்கிருர்கள். பேரறிஞன் கரிபால்டி. உலகில் பலர் அந்த இத்தாலிய விடுதலை வீரனை மறந்து விட்டார்கள். மாஜினி! எத்தனை பேர் அந்த கருஞ்சட்டை வீரனை நினைவில் கொண்டிருக்கின்றனர். ஏன்? இப்போது இத்தாலி என்று அழைக்கும் பகுதியில் தானே ரோமானிய சாம்ராஜ்யம் தோன்றியது. அதிலே போற்றத்தக்க முறையில், உலகினர் இன்னும் அதைப் பற்றிப் படிக்கும்போது பெருமூச்செறியும் வண்ணம் விளங்கிய ரோமானிய நாகரீகம் எங்கே! மறைந்து போயிற்று. இத்தாலி! அது ஒரு அதிசயநாடு.

## இத்தாலி

உலகில் உள்ள நாடுகளில் இத்தாலி அதிக நீளமுள்ள நாடு. அந்த மண்ணில் பிறந்தோர், உலகம் வியக்க அரசோச்சி யிருக்கிருர்கள். ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. All Roads Lead To Rome. உலகில் உள்ள எல்லா சாலைகளும் ரோம் நகரை நோக்கிச் செல்கின்றன என்பது தான் அப்பழமொழி. வீரர்களின் தாயகம்; ஜூலியஸ்சீசர் தாயகம் அது; மறுமலர்ச்சி வீரன் சவனரோலா பிறந்த நாடு; கிருத்துவ மதத்தினர் உலகில் இல்லாத பகுதியே கிடையாது, அம்மக்களின் தலைவன் போப் வாழும் நாடு. கலிலியோ வுக்கு தண்டனை அளித்த மதகுருமார்கள் இத்தாலியர் தான். வெற்றி வீரன் கரிபால்டி அங்கே பிறந்தார். இத்தாலியின் சரிதத்தில் பல சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்திருக்கின்றன. போப்பின் ஆதிக்கம், மன்னனின் சீற்றம் இவைகளுக்கு அடிமைப்பட்டு அங்கே சமுதாயம் அவதிக்குள்ளாயிற்று கருஞ்சட்டை வீரன் மாஜினி இத்தாலிய மக்களைத் தட்டி எழுப்பி ஐக்கிய இத்தாலி என்று முழக்கமிட்டான்.

இத்தாலியின் பூகோள அமைப்பு விசித்திரமானது. மூன்று வித தட்ப வெட்ப நிலையையும் அங்கே காணமுடியும். இத்தாலி நாடு முழுமைக்கும் ஒரே சரித்திரம் எழுத முடியாது. கடந்த ஏழு நூற்றாண்டுகளாக இத்தாலிக்கு ஒரே சரித்திரம் கிடையாது. வேனிசின் சரித்திரம், லம்பார்டியின் அரசியல் வளர்ச்சி, டங்கனி பகுதியின் முன்னேற்றம் இவைகளின் சரித்திரம் தான் இத்தாலியின் சரித்திரம். பிரான்சின் சரித்திர ஏடுகளைப் புரட்டினால் அதிலே இத்தாலிக்கு ஒரு அத்தியாயம் உண்டு ஜர்மன் நாட்டு சரித்திரத்தில் ஒரு பகுதி இத்தாலியினுடையது ஆஸ்திரியாவின் சரித்திரம் என்றால் அதிலே பெருப்பகுதி இத்தாலியினுடையது. இப்படி மாற்று நாட்டில் தன் சரிதம் இடம் பெறுமளவுக்கு தன்னைத்தானே தாழ்த்திக்கொண்ட நாடு இத்தாலி. அந்த நாட்டிற்குப் பனிரெண்டு தலை நகரங்கள். அந்த நகரங்கள் தங்களுக்குள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது, வெளி நாடுகளுடன் அதிக தொடர்பு கொண்டு விளங்கின. ஆனால் அந்தப் பனிரெண்டு நகரங்களிலும் வாழ்ந்தோர் இத்தாலியர்கள் தான். ஒரே இனத்தவர்கள். உலகம் மெச்ச வாழ்ந்தோரின் வழித்தோன்றல்கள். முசோலினியின் காலத்தில் இத்தாலி நாடு மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட குடி அரசு.

உலகில் பரப்பளவில் குறைந்த நாடுகள் எத்தனையோ வளமுள்ள நாடுகளாக விளங்குகின்றன. இத்தாலி பெரும்பாலும் ஒரு விவசாய நாடு கனிப்பொருள்களை அங்கே காணமுடியாது போ (Po) என்று அழைக்கப்படும் பகுதியில் தான் தொழிற்சாலைகளைக் காணலாம். உலகைப்பற்றி இத்தாலியர்கள் அதிகம் கவலைப்படுவது கிடையாது. உலகப் பொருளாதார வட்டத்தில் தன்னைச் சேர்த்துக் கொள்ளாத நாடு. அந்த நாட்டின் மிகப்பெரிய அரசியல்

வாதிகளுக்கே பொருளாதாரத்தின் மீது அதிக கவலை கிடையாது. . இத்தாலியர்கள் குடும்ப பாசம் உடையவர்கள். அவர்கள் மற்றவனை வஞ்சித்தோ, அல்லது ஏமாற்றியோ வாழ்வது கிடையாது. மத்தியதர வகுப்பினர் தான் அங்கே அதிகம். அவர்களிடையே கட்டுப்பாடு அதிகம். காரணம் அவர்கள் அறிவு நிறைந்தவர்கள் என்பதால் அல்ல, எண்ணிக்கையில் அதிகமானவர்கள் என்பதால். உடல் உழைப்பை அவர்கள் மதிப்பதும் கிடையாது. அதை அவர்கள் அலட்சியப் படுத்துவதும் இல்லை வகுப்பு வேற்றுமைகள் அதிகம் அங்கே காணப்படவில்லை. நகரத்தில் உத்தியோகம் பார்க்கும் மனிதன் தானே. கிராமத்தில் தம் பார்க்கும் மனிதன் தானே, கிராமத்தில் உள்ள தன் நில புலன்களைக் கண் காணிப்பதைக் காணலாம்.

## அரசியல் வாதிகள்

இத்தாலி குடியரசு நாடு தான். அதன் உச்சியில் மன்னன் வீற்றிருந்தான். அவன் மீது மக்களுக்கிருந்த அன்பு அமோகமானது. தென் பகுதியில் தான் முடியாட்சி நீண்ட காலமாக மக்கள் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது. இத்தாலியில் தோன்றிய புதிய கருத்துக்கள் அனைத்தும் வடக்கே பிறந்தவர்களால் சொல்லப் பட்டவை தான். அரசியல் கட்சிகள் அதிகம் அந்த நாட்டில் இல்லை யென்றாலும் அக் கட்சிகளின் போக்கு மிகவும் விசித்திரமானது. அந்த நாடு அதன் தலைவர்களையே நம்பி வாழ வேண்டியிருக்கிறது. ஒரு கட்சி தன் தலைவனை நீக்கி விட்டதென்றால் மீண்டும் அக் கட்சிக்கு அத்தகையதோர் தலைவனை தேர்ந்தெடுக்க முடியாது அக் கட்சியே நசித்துப் போகும். தனி மனிதன் அந்த நாட்டு அரசியல் வாழ்வில் எப்போதும் அதிக ஆதிக்கம் செலுத்துகிறான். அங்கே உள்ள அரசியல் கட்சிகளின் முக்கிய குறிக்கோள் தங்கள் கட்சியின் திட்டங்களை எப்படி

நிறைவேற்றுவது என்பதல்ல, எப்படி நடந்தால், எவ்வித சூழ்ச்சிகள் நடத்திஞல், யாரை மோசம் செய்தால், எதைச் சொல்லி மக்கள் மனதை மாற்றிஞல் அதிகாரத்துக்கு செல்ல முடியும் என்பது தான். பதவிக்குப் போக வேண்டும் என்பது தான் இத்தாலிய அரசியலில் முக்கிய குறிக்கோள். தன் மதிப்பை இழக்காது ஒரு கட்சி தன் திட்டங்களை அப்படியே தலை கீழாக மாற்றியமைக்கும். மக்கள் அங்கே ஒரு கட்சிக்கு கொடுக்கும் ஆதரவு அக் கட்சியின் திட்டங்களுக்காக இருக்காது: அக் கட்சியினரின் மீது தங்களுக்கு ஏற்படும் அனுதாபத்தால் தான் இருக்கும். லாப வேட்டைக்காரர்கள், புரட்சி வீரர்கள், புனிதவான்கள், லட்சிய வாதிகள், பதவிப் பித்தர்கள், மக்கள் அபிமானிகள், மக்கள் துரோகிகள் அத்தனை பேரும் அங்கே ஒரே கட்சியில் சேர்ந்து பணிபுரிவார்கள், இழி செயல் புரிவார்கள். அங்குள்ள அரசியல் வானின் வர்ணஜாலம் வானவில்லின் நிறங்களைவிட அதிக வண்ணங்களைக் கொண்டது. இந்த அதிசயபுரி தான் பாசிசத்தின் தோற்றுவாய் முசோலினியின் தாயகம்.

## பிறப்பு

பெனிடோ முசோலினி 1883-ம் ஆண்டு ஜுலை மாதம் 29-ம் தேதியன்று பிறந்தார். டோவியா என்னும் இத்தாலிய கிராமம் ஒன்றில் ஒரு சிறிய குன்றின் மேல் உள்ள வராஞே (Varano dir casalari) என்னும் இடத்தில் பிறந்தார். இவரது முன்ஞேர்கள் உழவர்கள். பதிமூன்ரும் நூற்ருண்டிலிருந்து அப்பகுதியில் வாழ்ந்தனர். பதினெட்டாம் நூற்ருண்டில் இவரது முன்ஞேரில் ஒருவர் லண்டனில் கவி புனைவதில் திறமைப் பெற்று விளங்கிஞர். முசோலினிக்கு இசையின் மீது நீங்காப் பற்று உண்டு. அலிசன்ரோ (Alessandro Musolini) என்னும் இவருடைய தந்தை கொல்லர் தொழில் செய்து வந்தார்.

முசோலினியின் பிறப்பிடம் இயற்கையன்னை தன் முழு திறமையையும் காட்டி யிருக்கும் பகுதி. அழகு மலர்ச் சோலைகள் அதன் இடையே சிறு சிறு குன்றுகள். அக் குன்றுகளைச் சுற்றி சுற்றி வழிந்தோடும் அருவி. அந்த அருவிக் கரையின் அருகே வளம் கொழிக்கும் வயல்கள், கனித் தோட்டம் அதிலே சிந்து பாடும் பறவைகள் மனிதன் ஓய்வு பெற்று அவன் உள்ளம் மகிழ வேண்டு மானால் அங்கே சென்றால் போதும். முசோலினி அங்கே ஓடிய அருவிகளிடையே தன் அண்ணன் ஆர்னால்டோ (Arnalda) வுடன் பாலம் கட்டி விளையாடுவார். இயற்கை யின் பொலிவைக் காண்பதில் முசோலினிக்கு மிக்க மகிழ்ச்சி. இத்தாலியின் அதிபனான பின்பும் முசோலினி தான் பிறந்த இடத்துக்கு அடிக்கடி சென்றார். ஹிட்ல ரைப் போல் அவர் பதவிக்குச் சென்றதும் தன் பிறப் பிடத் துக்கே செல்லாமல் இருந்ததில்லை.

முசோலினி பிறந்த இடம் இயற்கையின் அன்புக்கரங் கள் விளையாடும் இடம். அது போல் அவர் பிறந்த இடத் தில் வாழ்ந்த மக்கள் அரசியலில் தீவிர வாதிகள். சோஷிய லிஸ்டுகள், குடியரசுவாதிகள், மார்க்கசீய வாதிகள். நிறைந்த பகுதி அது. முசோலினியின் தந்தை ஒரு தீவிர மார்க்கசீய வாதி. பள்ளிக்கே அவர் சென்றது கிடையாது. ஆனால் மாலை நேரங்களில் அவர் ஊர் மக்களுடன் தன் தொழிற்சாலையில் அரசியல் நிலைபற்றிப் பேசி மற்றவர்களால் பாராட்டப்படுவதை முசோலினி அனுதினமும் கண்ணுற்று தன் தந்தையின் திறமையை வியந்திருக்கிறார்.

## பள்ளியில்

முசோலினியின் தாயார் ரோசா (Rosa) என்பவர். ஆசிரியராக பணியாற்றியவர். தன் தாயாரிடம் தான் முசோ லினி கல்வி பயின்று பின் பிளடாப்பியோ என்னும் ஊரில்

உள்ள பள்ளியில் சேர்ந்தார். அவர் வீட்டிற்கும் அப் பள்ளிக்கும் இடையே இரண்டு மைல்கள். நடந்துதான் சென்ருர். அவர் சீமானின் மகன் அல்ல, ஆனால் அவர் சேர்ந்த பள்ளியில் சீமான்களின் குழந்தைகள் படித்தார்கள். அக் குழந்தைகள், இந்தப் பராரியின் மகனைப்பார்த்து அவன் மீது எத்தனையோ முறைகள் கல் எறிந்தார்கள். பள்ளிக்குச் சென்ற அவரை ஆசிரியர் மூன்ருவது வரிசையில் உள்ள பெஞ்சியில் உட்காரச் சொன்ருர். 'ஏன்' என்று கேட்கும் முறையில் முசோலினி ஆசிரியரைத் திரும்பிப் பார்த்தார். என்னடா பயலே விழிக்கிருய், முதல் இரண்டு வரிசைகளில் உட்கார வேண்டியவர்கள் சீமான் வீட்டுக் குழந்தைகள். உன் போன்ற ஏழைகள், பஞ்சைகள், பஞ்சைகள், பராரிகள், கதியற்றவர்கள், கபோதிகள் வீட்டுக் குழந்தைகள் எல்லாம் பின் வரிசைகளில் தான் உட்காரவேண்டும்' என்று கூறிஞராம் ஆசிரியர். சீமான் வீட்டுக் குழந்தைகள் இந்த கொல்லரின் மகன் மீது கல் எறிந்தார்கள். பள்ளிக்குள்ளே ஆசிரியர் ஏழைகள் எல்லாம் சீமான் வீட்டுக் குழந்தைகள் கூட அமரக்கூடா தென்கிருர். இளமையில் தனக்கேற்பட்ட இந்த அவமானத்தை முசோலினி என்றுமே மறக்கவில்லை. மனிதர்களுடன் அவருக்கு ஏற்பட்ட இந்த முதல் அறிமுகம் அவர் உள்ளத்தை எஃகுக் கோட்டையாக்கி விட்டது. மனிதர்கள் என்று சொல்லும் போதும் எழுதும் போதும் முசோலினி 'மனிதக் கூட்டம்' (Human herd) என்றே எழுதுகிருர். வாழ்க்கையில் தோல்வி கண்டவர்கள் தான் மனித இனமே நன்றி கெட்ட கூட்டம் என்று கூறுவார்கள். ஒரு வேளை முசோலினியின் வாழ்க்கையும் ஒரு தோல்விதானே என்னமோ? நாம் முன்பு கூறிய முறை அமுலில் இருந்த பள்ளியில் முசோலினி ஒழுங்காகப் படித்தார் என்று கூற முடியும். தினம் தோறும் சிறுவர்களுடன் சண்டை தான். "அனுதினமும் மாலை நேரத்தில் நான்

என் தாயாரிடம் என்கைகளை நீட்டிப் பேசப் பயப்படு வேன். என் கைகளில் காயம் ஏற்பட்டு அதிலே வடியும் குருதியை என் தாயார் பார்க்க நேர்ந்தால் அவள் உள்ளம் மிகவும் வேதனையடையும்.'' இப்படி முசோலினியே கூறி யிருக்கிறார் என்றால் அவரது பள்ளி வாழக்கை எப்படி இருந்தது என்று நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை.

உயர்தரப் பள்ளிக்கு அவரது தாயாரின் தூண்டுதலின் பேரில் முசோலினி சென்றார். பான்சா (Faenza) என்னும் நகரில் மத குருமார்கள் நடத்தி வந்த பள்ளியில் அவர் கல்வி பயின்றார். இப்பள்ளியில் அவர் மனிதர்கள் கட்டுப் பாட் டிற்குள் அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்பதை உணர்ந்ததாகக் கூறுகிறார். விடுமுறையின் போது தன் தாயாருடன் ரவீனு நகர் சென்று அந்த நகரின் சரித்திரச் சின்னங்களைக் கண்டு மகிழ்ந்தார். கவிஞர் டாண்டியின் கல்லறையில் அவர் உள்ளம் லயித்து விட்டது. ஊர் திரும் பும் போது அவர் கொண்டு வந்தது என்ன தெரியுமா? ஒரு வாத்து அவரும் அவரது சகோதரர் ஆர்னல்டோவும் அவ்வாத்தினை அவர்கள் வீட்டருகே ஓடிய அருவி ஒன்றில் நீந்த விட்டு வேடிக்கைப் பார்த்தார்களாம் உலக மக்கள் பலரது உள்ளங்களில் பயத்தை உண்டு பண்ணப் போகும் முசோலினி வாத்துடன் விளையாடினார் என்றால் விந்தையாக விருக்கிறது.

## ஆசிரியர் பயிற்சி

முசோலினியின் தாய் தன் மகன் மதகுருவாகப் பயிற்சி பெற வேண்டுமென விரும்பினார். அவர் தந்தை தன் மகன் ஆசிரியராகப் பயிற்சி பெற்று இத்தாலிய இளைஞர் களின் அறியாமையைப் போக்க வேண்டுமென விரும் பினார். ஒரு வேளை அவர் பள்ளிக்குச் செல்லாததின் துயரை உணர்ந்து, தன் நாட்டில் வருங்காலத்தில் எல்லா மக்களும்

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்க வேண்டுமென்று விரும்பினர் போலும். அக்காலத்தில் முசோலினியின் உள்ளத்தில் அவர் வாழும் நாடு கொஞ்சம் கொஞ்சமாக முன் வந்து நின்றது. இத்தாலியர்களின் உள்ளத்தில் சோகம் நிரம்பியிருந்த நேரம் அது. சமுதாயத்திற்கு எவ்விதப் பயனையும் தர இயலாத பலர் அங்கே உரிமை பெற்று உல்லாச வாழ்வு வாழ்ந்தார்கள். இத்தாலியின் இருட்டுக் காலம் அது. முசோலினியின் தந்தையிடம் வாதித்த மக்களின் கண்களில் காணப்பட்ட துக்கமும் அவர்கள் வாதத்தில் நிலவிய கடுமையான சூழ்நிலையும் முசோலினிக்கு ஒரு வித அச்சத்தைக் கொடுத்ததாம்.

ஆறு ஆண்டுகள் பயிற்சிக்குப்பின் ஆசிரியர் தொழிலில் முசோலினி பட்டம் பெற்றூர். ஆசிரியர் ஆனூர். வேலை தேடும் படலம். அதிலே தேவைப்பட்ட சிபார்சு கடிதங்கள் செல்வாக்குப்பெற்ற மனிதர்களின் அனுதாபத்திற்காக அலையும் நிலை இத்தனையும் முசோலினிக்கு ஏற்பட்டது. எப்படியோ ஒரு பள்ளியில் ஆசிரியர் ஆனூர். அரசியல் வாழ்வில் உள்ள பலர் தங்கள் வாழ்க்கையை ஆசிரியர் தொழிலில் தான் துவங்கி இருக்கிறூர்கள் என்று தன் முதல் வேலையைப் பற்றிக் குறிப்பிடும் போது முசோலினி எழுதி யிருக்கிறூர். ஒரு ஆண்டிற்குள் அந்த வேலை முடிந்தது. திரும்பி வீட்டிற்குச் செல்ல அவர் மனம் இடங்கொடுக்க வில்லை. ஸ்விட்ஸ்சர்லாந்துக்குப் போக எண்ணினூர். அரசியல் அனுதைகள், உற்றூர் உறவினரை இழந்து பிறந்த நாட்டு அரசாலோ அல்லது மக்கள் மன்றத்தாலோ துரத்தப் பட்டோர் வாழும் நாடு அது. முடியிழந்த மன்னர்கள், பதவியிழந்த மந்திரி, நாடு கடத்தப் பட்ட அரசியல் ஞானி அனைவரும் அடைக்கலம் புகும் நாடு. அங்கே செல்ல வேண்டுமென்ற எண்ணம் முசோலினிக்குத் தோன்றிய போது அவரிடம் நாற்பத்தைந்து லையர்களே இருந்தன. பணம்

அனுப்பு என்று தன் தந்தைக்குத் தந்தி அடித்தார். அவரது தாயார் நாற்பத்தைந்து லையர்கள் தந்தி மூலம் அனுப்பினர்கள். ஸ்விஸ்ட்சர்லாந்திற்குச் சொல்லும் வழியில் அவரது தந்தையைப் போலீசார் கைது செய்ய வாரண்ட் பிறப்பித்துள்ளார்களென்ற செய்தி பத்திரிகைகளில் வெளி வந்தது. பிரிடோப்பியாவில் நடைபெற்ற தேர்தலில் மதவாதிகள் கட்சியினர் பதவிக்கு வந்து விட்டால் என்ன செய்வது என்பதற்காக சோஷியலிஸ்டுகளும், பாப்புலர் கட்சியினரும் ஓட்டுப் பெட்டிகளையே நாசம் செய்தனர். இது சம்பந்தமாக முசோலினியின் தந்தை மீதும் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. 'திரும்பி விடலாமா?' என்று எண்ணினர். ஆனல் திரும்பவில்லை.

## நாடோடி

உலகின் விளையாட்டு மைதானம் என்று கூறுகிறார்கள் ஸ்விஸ் நாட்டை. செல்வச் சீமான்களுக்கு அது, மது, மங்கை, மாளிகை வாசம், படகு யாத்திரை, இசையரங்குகள், ஏகாந்தமான மலையுச்சி, பனிக்கட்டியின்மேல் பவனி வருதல் அத்தனை இன்பங்களையும் அந்த நாடு அளிக்கும் ஆனல் முசோலினியிடம் தான் செல்வம் இல்லையே! ஏழைகளுக்கு இன்பம் எந்த நாட்டிலும் கிடைப்பதில்லை. ஸ்விஸ் நாடு மட்டும் உலக வழக்கிற்கு விதி விலக்கா என்ன? அங்கே முசோலினி ஊர் சுற்றினர். அங்கே மறைந்து வாழ்ந்த அரசியல் வாதிகளுடன் உரையாடினர். உணவு கிடைக்காமல் பல நாட்கள் பட்டினி கிடந்தார். உறங்க இடமின்றி பாலத்தின் மதகின்மீது படுத்துறங்கினர் இத்தாலிய இலக்கியங்களை பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். அங்கே அவருக்கு கிடைத்த ஒரே ஒரு நண்பன் யார் தெரியுமா? வறுமை. அத்தோழன் அவர் அந்த நாட்டை விட்டுச் செல்லும் வரை அவரை விட்டு நீங்க வில்லை.

## சிறை

தன்னைப்போல் அங்கே வாழ்ந்த அகதிகளுக்கு உரிமை வேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் பேசினர். போலீசார் அவரைக் கைது செய்தனர். ஒவ்வொரு மாகாணத்தினின்றும் நாடு கடத்தப்பட்டார். அங்கே உள்ள சிறைகள் அவரது இதயத்தை இரும்புபோல் ஆக்கிவிட்டன. பத்து தடவைகள் சிறைபட்டார். நான்கு அடி அகலமும், ஆறு அடி நீளமும் உள்ள இருட்டறையில் முசோலினி மாதக் கணக்கில் சிறைபட்டுக் கிடந்தார். முசோலினியின் காரியாலயங்கள் அனைத்தும் மிகவும் விசாலமானவை ஒரு வேளை சிறையில் தான் அடைந்த துயரை நினைத்துத் தான் அவரது அலுவலகங்கள் அனைத்தும் விசாலமாக அமைக்கப்பட்டன போலும்.

ஸ்விஸ் போலீசார் இவரைத் துரத்தாத நாள் இல்லை. நாடு கடத்தப்பட்ட மனிதனல்லவா அவர் ஒரு நாள் ஜினிவா போலீசார் கட்டாயமாக முசோலினியின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்தனர். கேடிகள், சமூகத் துரோகிகளுக்கு போலீசார் செய்யும் முதல் மரியாதை அது தான். ஜினிவா நகரில் தான் சர்வதேச சங்கம் கூடியது. முசோலினி சர்வதேச சங்கத்துடன் ஒத்துழைக்க மறுத்தார். தன் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்து தன்னை அவமானப் படுத்திய நகரில் கூடும் சபைக்குக் தான் ஏன் ஆதரவு தர வேண்டும் என்று எண்ணினர் போலும்!

## ஒரு நிகழ்ச்சி

ஒரு நாள் மாலை, இரவின் வரவு நோக்கி உலகம் காத்திருந்தது. ஒரு உருவம் தள்ளாடி நடந்து செல்கிறது. அதன் நடையிலே கப்பீரமில்லை. ஏழையின் நடை. தன் மீது

வசைமாறிப் பொழியும் போது தொழிலாளி எப்படி தன் எஜமானன் முன்பு தலைகுனிந்து நிற்பானே அப்படி அந்த உருவம் தலைகுனிந்து நிற்கிறது. அகோரப் பசியினால் அந்த உருவத்திற்கு நடக்கவும் சக்தியற்றுப் போயிற்று. ஒரு பார்க்கின் ஓரமாக சென்ற அந்த உருவம் பார்க்கின் உள்ளேயிருந்து வந்த நகைப்பொலியைக் கேட்டு அதன் உள்ளே செல்கிறது. அங்கே இரண்டு பேர் ஆங்கிலேயப் பெண்கள் விருந்து உண்கிறார்கள். மெதுவாக அந்த உருவம் அவர்களிடம் சென்று தன் கைகளை நீட்டுகிறது. ஒரு பெண்மணி அந்த உருவத்தைப் பார்த்து விட்டு மறுபக்கம் தன் முகத்தைத் திருப்பினாள். கையை நீட்டியபடியே நின்ற உருவம் திடீரென்று அப் பெண்மணியின் கையிலிருந்த ரொட்டித் துண்டுகளைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறது. வெகு தூரம் சென்று அவசரம் அவசரமாக அந்த உருவம் ரொட்டியைய விழுங்கியது இப்போது அதன் முகத்தில் வேதனை. அந்த உருவம் வேறு யாருமில்லை. முசோலினி தான். வறுமை மனித சமுதாயத்தின் விரோதி. உலகைப் பார்த்து சவால் விட்டார் முசோலினி. அவருக்கிருந்த தைரியம் வேறு யாரிடமும் காணமுடியாது. அந்த மனிதன் ரொட்டித் துண்டுகளைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறார். வறுமையின் முதல் முழக்கம் களவு. வறுமை, ஆம்! அது மனித உள்ளத்தின் கொள்ளை நோய் அலைகடல் பொங்கி அகிலத்தை அழிக்கிறது என்றபோதும் மனிதன் நிலை குலையமாட்டான். வறுமையின் கொடுமையினின்று மனிதன் தப்பமுடியாது. எஃகு நெஞ்சம் கொண்டவனைக் கோழையாக்கும், யாருக்கும் தலைவணங்காத வீரனை, கோழையின் முன் மண்டியிடச் செய்யும். தன் ஜீவ லட்சியத்திற்குப் புறம்பாக எழுத மறுக்கும் எழுத்தாளனை, வஞ்சகனை வள்ளல் என்று எழுதச் செய்யும். கொடுங் கோலனை, குடிமக்கள் காவலன் என்று கவி புனையச் சொல்லும், வறுமை யாருடைய இருதயத்தின் மீது தன் அம்புகளை

விடுகிறதோ அந்த மனிதன் கல் நெஞ்சம் உடையவன் என்றாலும் அவனைக் கலங்கச் செய்துவிடும். மனித சமுதாயம் என்று வறுமைக்கு தன்னகத்தே இடமின்றிச் செய்கிறதோ அன்று தான் விழியில் நீர் இன்றி, வேதனைக்குரல் இன்றி மனிதன் நடமாடுவதைக் காண முடியும். கொள்ளை நோய் மனிதன் உயிரைத்தான் மாய்க்கும்; வறுமை மனிதனை உயிருடன் வைத்து அணு அணுவாக அவன் உயிரைக் குடிக்கும். அந்த வறுமை தான் முசோலினியை ரொட்டியைப் பிடுங்கச் சொன்னது. தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இச் சம்பவத்தை முசோலினி தன் வாழ்க்கை சரித்திரத்திலே கூட எழுதாமல் விட்டிருக்கிறார் என்றால், அன்று அவர் அடைந்த வேதனையை நாம் அளவிடமுடியாது.

"நான் அரசியலில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். துயர்பட்டு அரசியலில் நான் பணம் சம்பாதிக்கவில்லை. சமுதாயத்தின் கேடுகளைக் களைகிறேன் என்று கூறிக் கொண்டே சமூகத்தைச் சுரண்டும் புல்லுருவிகளையும், அரசியல் வாழ்வில் பணம் திரட்டும் எத்தர்களையும் நான் வெறுக்கிறேன். பசி எனக்குத் தெரியும், பட்டினி கிடந்திருக்கிறேன். யாரிடமும் கடன் கேட்டதில்லை, நான். என் நிலையைக் கண்டு என் மீது மற்றவர்கள் அனுதாபப் படும்படி நான் நடந்து கொண்டது கிடையாது. வசதியில்லை என்றால் என் தேவைகளைக் குறைத்துக் கொள்வேன்." இது முசோலினி தன்னைப் பற்றிக் கூறுவது. இப்படி வறுமையில் வாடிய அவர் ஸ்விஸ் நாட்டை விட்டு தன் தாயகம் திரும்பினார். வறுமை அவரை அங்கே அனுப்பியது. மீண்டும் அதே வறுமை அவரைத் திருப்பி அனுப்பியது.

## இராணுவம்

1904-ம் ஆண்டில் முசோலினி இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். சோஷியலிசக் கருத்துக்கள் அவர் உள்

ளத்தில் வேரூன்றி விட்டன. ஒரு நாள் இவரது தாயின் உடல் நிலைப்பற்றி தந்தி ஒன்று வந்தது. இவர் ஊர் வந்து சேர்வதற்குள் அவரது தாயார் நினைவிழந்து போனார். தாயாரின் மரணம் இவருக்குத் தந்த வேதனை சொல்லி முடியாது.

"நான் எத்தனையோ துயரங்களை அனுபவித்திருக்கிறேன். அவைகள் என் உள்ளத்திற்கு எஃகு முலாம் பூசின. எப்படி மனிதன் வாழ வேண்டுமென்று நான் உணர்ந்தது, நான் அடைந்த துயரங்களால் தான். அவைகளுக்கு நான் இன்று நன்றி செலுத்துகிறேன். என் சுதந்திர உள்ளம், என்னிடம் குடிகொண்டிருக்கும் கருத்துக்கள் ஏன், எனது மத நம்பிக்கைகள் கூட இன்று என் துயரை அடக்க முடியவில்லை. எனக்குச் சொந்தமான, என் அருகே என்றும் இருந்த பொருள் ஒன்றை நான் இழந்து விட்டதாகக் கருதுகிறேன். என் முகத்தில் தவழும் மகிழ்ச்சிக்காக என் தாய் எவ்வளவு துயரங்களை ஏற்றுக் கொண்டாள் தெரியுமா? நான் அனாதையாய் அலைந்தபோது என்றாவது ஒருநாள் திரும்பி வருவேன் என்று எண்ணி எண்ணி ஏங்கிய என் தாய் என்னை விட்டுப் போய்விட்டாள். இன்று அவள் உயிரோடு இருந்து என்னைப் பார்க்க வேண்டும்." முசோலினி தன் தாயின்மீது வைத்திருந்த அன்புக்கு இச் சொற்களே சாட்சிகளாக அமைகின்றன.

## ஆசிரியர்

1910ல் இராணுவப் பயிற்சி முடிவடைந்தது. முசோலினி இப்போது பாப்புலே (Papulo) என்னும் பத்திரிகையில், இத்தாலியின் மிகப் பெரும் அரசியல் வாதியான செசாரே பாட்டிஸ்டி (Cesare Battisti) என்பவரிடம் உதவியாளராகச் சேர்ந்தார். 1912-ம் ஆண்டில் இத்தாலியில் புரட்சிக்கருத்துள்ள சோஷியலிஸ்டுக் கட்சியினர் ஆதிக்கம் பெற்றனர்.

முசோலினியும் புரட்சிக்காரர் ஆனார். ஆஸ்திரியாவும் இத்தாலியும் ஒன்றை ஒன்று தினந்தோறும் தூற்றிவந்த காலம் அது. இத்தாலியின் சில பகுதிகள் ஆஸ்திரியாவிடம் இருந்தன. ஒரு நாள் முசோலினி இத்தாலியின் எல்லை தற்போதுள்ள ஆலா (Ala) நகரின் அருகே இல்லை யென்றும், அந்த எல்லை ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தில் இருக்கிறது என்றும் பத்திரிகையில் எழுதினார். அதன் காரணமாய் அவரை வியன்னு அரசாங்கம் நாடு கடத்தியது. பின்பு அவர் பார்லி நகர் சென்றார். சோஷியலிஸ்ட் கட்சியில் அவருக்கு இதற்குள் நல்ல செல்வாக்கு ஏற்பட்டது. 1912ல் பலோன்காவில் நடைபெற்ற காங்கிரசில் முசோலினி சோஷியலிஸ்ட் கட்சியின் செய்தித் தாளான 'அவந்தி'(Avanti)யில் ஆசிரியராக நியமனம் பெற்றார். இவரது ஆதிக்கத்தில் வந்த பிறகு அப் பத்திரிகையின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகமாயிற்று. நாட்டிலே முசோலினிக்கு நல்ல எழுத்தாளன் என்ற பெயர் வந்தது. கட்சியில் அவரை ஒரு தலைவராக கருதினர். இந்த நேரத்தில் முசோலினியின் தந்தை இறந்து போனார். முசோலினி தன் வாழ்வையும் தாய் நாட்டுக்கு அர்ப்பணிக்க சபதம் செய்தார். இவரது உழைப்பு பலன் அளித்தது. 1914-ம் ஆண்டில் சோஷியலிஸ்டுகள் சர்க்காரை எதிர்த்து வேலைநிறுத்தங்கள் செய்தனர். அவைகள் வெற்றிகரமாக நடைபெறக் காரணமாயிருந்தவை முசோலினியின் எழுத்துக்கள் தாம்.

## உலகப்போர்

1914-ம் ஆண்டு ஜுலை 28-ம் தேதி முதலாம் உலகப் போர் துவங்கியது. இத்தாலி நாடு போரில் கலந்துகொள்ள வேண்டுமென்று முசோலினி விரும்பினர். ஆனால் மக்களிடம் ஆதிக்கம் பெற்றிருந்த சோஷியலிஸ்ட் கட்சி போரில் இத்தாலி நடுநிலைமை வகிக்கவேண்டுமென விரும்பியது.

அக் கட்சிப் பத்திரிகையான 'அவந்தி'யில் முசோலினி போரை ஆதரித்து எழுதினார். பத்திரிகை ஆசிரியர் பதவியி னின்றும் நீக்கி, சோஷியலிஸ்ட் கட்சி அவரை கட்சியினின் றும் வெளியேற்றியது. இவரைப்போன்று போரில் கலந்து கொள்ள வேண்டுமென்று கூறியோர் அனைவரும் கட்சியி லிருந்து நீக்கப்பட்டனர்.

கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட முசோலினி 'பாபுலோ டி' இட்டாலியா' (Populo d' Italia) என்னும் தினசரி ஒன்றை சொந்தமாக வெளியிட்டார். அதன் மூலம் நாட்டு மக்களைப் போரில் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். கொஞ்சகாலம் சென்ற பிறகு தன் பத்திரிகையைத் தன் சகோதரன் ஆர்னுல்டோவிடம் தந்து விட்டு முசோலினி இராணுவத்தில் சேர்ந்தார். போர்க்களத் தில் அவருக்கு ஒருநாள் உடலில் ஐம்பதுக்கு மேற்பட்ட குண்டுகள் பாய்ந்தன. ஆனால் அவர் மரணமடையவில்லை. ஆஸ்பத்திரியில் மூன்றுமாத காலம் சிகிச்சைப்பெற்று ஊர் திரும்பினார். தனது பத்திரிகையில் போரை ஆதரித்து இத்தாலிய மக்களின் வீரத்துக்கு அவர் விடுத்த அறைகூவல் பயன் அளித்தது. இத்தாலிய இராணுவ வீரர்களும் இளைஞர் களும் முசோலினியின் எழுத்தினால் புத்துணர்ச்சி பெற்றனர். இத்தாலிய இராணுவம் கடைசியாக ஆஸ்திரிய இராணு வத்தைத் தோற்கடித்தது. இத்தாலியர்களுக்குச் சொந்த மான டிரிஸ்டி, டிரினிடோ பிரதேசங்கள் இத்தாலிக்குக் கிடைத்தன. போரில் இத்தாலி வெற்றி பெற்றது. "இத்தா லிய இளைஞர்களே, நமது நாடுகள் நமக்குக் கிடைத்து விட்டன, பதினான்காம் நூற்றாண்டில் நமது கவிஞன் டாண்டி கண்ட கற்பனை இன்றுதான் நினைவாயிற்று" என்று எழுதினார் முசோலினி. போர் முடிவுற்றது. முசோலினியின் பெயரும் இத்தாலியர்களின் உள்ளத்தில் பதிந்து விட்டது. அவரது வாழ்க்கையின் முக்கியமான பகுதி ஆரம்பமாயிற்று.

பதவி, அதிகாரம், அந்தஸ்து எல்லாம் அவருக்கு கிடைத்தன. இந்த முரட்டு பேனு வீரனை இத்தாலியின் மன்னர் பெருமான் தானுக அழைத்துப் பதவி அளித்தார். மூன்று ஆண்டுகள் உருண்டோடுவதற்குள் முசோலினியை ஏற்றிச் சென்ற கார் அரச மாளிகை நோக்கி ஓடியது. அதற்குக் காரணங்கள் இரண்டு. ஒன்று முசோலினியின் உழைப்பு, இரண்டு இத்தாலியில் 1919 ம் ஆண்டில் நிலவிய சூழ்நிலை.

# 1919

உலகப் போர் முடிவடைந்தது. உலக மக்கள் அனைவரும் வார்சேல்ஸ் ஒப்பந்தத்தின் ஷரத்துகளைப் படித்துக் கொண்டிருந்தனர். வெற்றிபெற்ற நாடுகளில் புலவர்கள் வீரக் கவிதைகள் புனைந்தனர், தோற்ற நாடுகளில் துவண்ட உள்ளத்துடன் மக்கட் கூட்டம் "என்று நீங்கும் இத் துயரம்' என்று ஏங்கியவண்ணமிருந்தது. இத்தாலி முதல் உலகப்போரில் வெற்றி பெற்ற நாடு. இத்தாலியின் அரசியல் வானில் சூழ்ந்து நின்ற யுத்த மேகங்கள் நீங்கியதும், அங்கே அமைதி ஏற்படவில்லை. கொந்தளிப்பு ஏற்பட்டது, இத்தாலிக்குப் புதிய தொந்தரவுகள் ஏற்பட்டன. இராணுவத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் புதியதாய் தோன்றிய தொழில்களில் ஏற்பட்ட மந்தம் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது. போர்க்காலத்தில் செல்வந்தர்களானேரின் ஆதிக்கம் சமுதாயத்தில் புதிய பிரச்சினைகளைக் கிளப்பியது. நாட்டில் அரசோச்சிய சர்க்காருக்குப் போதிய திறமையில்லை. நாட்டை ஆள்வதற்கு மக்களைத் தேர்ந்தெடுக்கிறார்களே, வாக்காளர்கள் அவர்கள் மக்கட் தொகையில் நூற்றுக்கு முப்பது பேர்கள் என்ற போதிலும் அவர்கள் மனதிலே குழப்பங்கள். போரைப்பற்றி அந்த நாட்டு மக்கள் அறிந்திருந்த அளவு அரசியலைப்பற்றி அவர்களுக்கு அதிகம் தெரியாது. உள் நாட்டில் கொந்தளிப்பு.

சர்க்காரோ வெளிநாட்டுப் பிரச்சினையில் கவனம் செலுத்தியது. நாட்டிலே ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மக்கள் மன்றத்தில் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தியது. எங்கு பார்த்தாலும் வேலை நிறுத்தங்கள். அதைத்தடுக்க இயலாத சர்க்கார் பயந்து போயிற்று நல்லதோர் புரட்சிக்கு சூழ்நிலை உருவாகியிருந்தது. சோவியத்நாட்டின் புரட்சிக் கதைகளைக் கேட்ட விவசாயிகள் தங்கள் கண் எதிரே காணப்படும் வயல்களை என்று தங்களுக்கு சொந்தமாக்கப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நாட்டில் அரும்பிய நல்ல சூழ்நிலையையும் மக்களிடையேத் தோன்றும் புதிய சக்தியையும் பயன் படுத்த சோஷியலிஸ்டுகள் தவறி விட்டனர். அவர்கள் தான் போர் கூடாது என்றவர்களாயிற்றே. இந்த நேரத்தில் இராணுவ வீரர்கள் திரும்பி வந்தனர். அவர்களை சரியாக யாரும் வரவேற்கவில்லை, சர்க்கார் தங்களுக்கு அளித்திருந்த வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டுவிட்டது என்பதை உணர்ந்தார்கள். இவர்கள் விட்டுச் சென்ற வேலைகளில் புதிய ஆட்கள் அமர்ந்திருந்தனர். தெருக்களிலே உல்லாசிகளைக் கண்டார்கள். அதிக சம்பளம் பெற்ற தொழிலாளியைக் கண்டார்கள். சாதாரண விவசாயி இன்று செல்வச் சீமானாக விளங்குவதைப் பார்த்தார்கள். நாட்டைக் காக்கப் போரிட்டவர்கள் இன்று விதியற்றுப் போனார்கள். "துப்பாக்கி மருந்து கைவசம் உள்ளது போதுமா. இன்னும் அனுப்பலாமா? போர்க்களத்தில் வீரர்கள் துவண்டு போகாதிருக்க இன்று புதிய வகையான பிராந்தி அனுப்பி இருக்கிறோம். வீரர்களுக்குத் தேவை என்ன என்பதை உடனே அனுப்பக் காத்திருக்கிறோம்" என்று செய்திகள் அனுப்பிய சர்க்காரோ இன்று அவர்களை திரும்பியும் பார்க்க மறுத்துவிட்டது. அவர்களில் பலர் செங்கொடியின் கீழ் நின்று போராடத் தயாராக இருந்தனர்.

பொது உடைமை வாதிகள் அதற்குத் தயாராக இல்லை. நாட்டில் நலிந்து போனோர் மத்தியதர வகுப்பினர். அவர்கள் தான் பெரும் பான்மை மக்கள். போர் வேண்டும் என்று கூறியவர்கள். ஆனால் சோஷியலிஸ்டுகள் என்ற பொது உடைமை வாதிகளோ போர் கூடாது என்றவர்கள். முன்னாள் இராணுவத்தினர் மீது பழி சுமத்தியவர்கள். மக்கள் அவர்களை நம்பவும் மாட்டார்கள். மத்தியதர வகுப்பினரின் ஆதரவு யாருக்கு உண்டோ, யார் மத்தியதர வகுப்பினரின் மேன்மைக்கு உழைக்கிறோம் என்று கூறுகிறார்களோ, எந்தக் கட்சியின் உறுப்பினர்களில் மாஜி ராணுவத்தினர், கிளார்க்கள், மாணவர்கள் அதிகம் உள்ளனரோ அவர்கள் தான், அந்த அரசியல் கட்சிக்குத் தான் இத்தாலியில் ஆதரவு கிடைக்கும். மாஜி இராணுவத்தினர் கழகங்கள் அமைத்தனர். துயர் பட்டோர் அனைவரும் கூடிப் பேச எண்ணினார்கள். தங்களுக்கு வாழ்வளிக்க எண்ணும் எக்கொடியின் கீழும் நின்று அவர்கள் பணியாற்றத் தயாராக இருந்தார்கள். இந்தச் சூழ் நிலையைச் சரியான முறையில் பயன் படுத்தினார் முசோலினி. பாசிஸ்ட் இயக்கம் தோன்றியது.

## இயக்கம்

உலகில் புதிதாய்த் தோன்றும் இயக்கங்கள் பல நாட்டு விடுதலைப் போரை நடத்தத் தோன்றியவைகள். ஆனால் முசோலினி தோற்றுவித்த இயக்கம் விடுதலைப் போர் நடத்த அல்ல. சர்க்காரைக் கைப்பற்றி அதன் மூலம் துயர் படும் மக்களுக்குக் குறிப்பாக வீதிகளில், விழிகளில் நீருடன் திரிந்த இராணு!வ வீரர்களுக்கு வாழ்வளிக்கத் தோன்றியது தான் பாசிஸ்ட் இயக்கம்.

"போர்க்களத்திலிருந்து திரும்பிய எங்களுக்கு நாட்டிலே வரவேற் பில்லை. வெற்றி பெற்று திரும்பிய வீரர்

109049



109049

களின் கையிலே தாங்கி வந்த தாய் நாட்டின் கொடிக்கு அங்கே மரியாதை செலுத்த யாரும் தயாராக இல்லை. அரசியல் வாதிகள், தத்துவப் பேராசிரியர்கள், லாப வேட்டைக் காரர்கள் அனைவரும் தங்கள் விருப்பப்படி நாட்டினரை அழைத்துச் செல்ல விரும்பியதால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. என் உள்ளம் ஆபத்து வருகிறது என்று எனக்குச் சொன்னது. இத்தாலியின் சில பகுதிகளை மாற்றாருக்குக் கொடுக்க முயற்சிகள் நடைபெற்றன. நாடு தனக்காக உயிர் விட்ட அறுபதாயிரம் பேர்களை மறந்து விட்டது. அவர்கள் சிந்திய குருதி விழலுக்கிறைத்த நீராயிற்று. நாட்டில் உள்ள அரசியல் வாதிகள், வெளி நாட்டாரைத் திருப்தி செய்ய முயன்றார்கள். பலம் பொருந்திய சர்க்கார் ஒன்று ஏற்பட்டால் தான் நாட்டில் அமைதி ஏற்படும் என்று நான் நம்பினேன். 1919 பிப்ரவரி 26-ம் நாள் சோஷியலிஸ்டுகள் ஊர்வலம் ஒன்று நடத்தினார்கள். மிலான் (Milan) நகரில் நடைபெற்ற அந்த ஊர்வலத்தினர் செய்த அட்டகாசம் சொல்லி முடியாது. ஊர்வலம் வருவதைக் கண்ட பலர் தங்கள் வீடுகளின் மீது பறந்த தேசியக் கொடியை அகற்றி விட்டனர். நாட்டில் செங்கொடி தான் பறக்க வேண்டும் என்று ஊர்வலத்தினர் கூச்சலிட்டனர். என் பத்திரிகாலயம் போலீசாரால் பாதுகாக்கப்பட்டது. மறுநாள் நான், 'மிலானின் தோல்வி ஊர்வலம்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதினேன். இத்தாலியர்களே, ரோமானியர்களே, எங்கே உங்கள் வீரம் மறைந்து போயிற்று. நமது எலும்புகளை ஒடித்து தான் சுகம் பெற போகும் கூட்டத்தினரை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா. நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம். இப்படி எழுதினேன், என் வேண்டுகோள் பயன் தந்தது.

பாசிஸ்ட் இயக்கத்தின் துவக்கத்தில் நாட்டின் நிலைமை பற்றி முசோலினி மேலே கூறியபடி எழுதியிருக்கிறார்.

V52, 127 M83 N45

1919 மார்ச் மாதம் 23-ம் தேதி யன்று மிலான் நகரில் முசோலினி தோழர்கள் கூடினார்கள். பாசிஸ்ட் இயக்கம் தோன்றியது. பாசிஸ்ட் (Facist) என்றால் கூட்டு முயற்சி என்று பெயர். முசோலினியின் பத்திரிகையான பாப்பு லோ டி இத்தாலியாவின் ஏஜெண்டுகள் அனைவரும் அந்த இயக்கத்தின் அமைப்பாளர்களாயினர். பாசிஸ்ட் இயக்கம் மற்ற அரசியல் கட்சிகளைப் போன்றதல்ல. அது ஒரு ராணுவ இயக்கம். பெரும்பாலும் இராணுவ வீரர்களே அதன் உறுப்பினர்கள். முசோலினி அரசியல் கட்சி ஒன்றை ஏற்படுத்த விரும்ப வில்லை. அரசியல் கட்சிகள் எல்லாம் நாட்டிலே ஏற்படும் கொந்தளிப்பைச் சமாளிக்க முடியாது வீழ்ச்சியுற்றுப் போகின்றன. ஆகவே, அரசியல் கட்சிகளால் பயன் ஏதும் கிடையாது என்கிறார் முசோலினி. பாசிஸ்ட் இயக்கத்தினர் முதல் தீர்மானம் மூலம் நாட்டில் வேதனைப் படுவோர் அனைவரையும் அவர்கள் இயக்கத்தில் சேர அழைத் தார்கள். இத்தாலியின் சுதந்திரம் அதன் தேசீயத் தன்மை பாதுகாக்கப்படவேண்டும். அதற்காக பாசிஸ்ட் இயக்கம், வெளிநாட்டு ஏகாதிபத்தியங்கள் இத்தாலியில் ஆதிக்கம் செலுத்தாது பாதுகாக்கும் என்பதுதான் அவர்கள் நிறை வேற்றிய இரண்டாவது தீர்மானம். அடுத்து நடைபெறப் போகும் பொதுத் தேர்தலில் பாசிஸ்ட் இயக்கம் கலந்து கொள்ளும் என்பதுதான் மூன்றாவது தீர்மானம். நாட்டில் முசோலினிக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கினால் பாசிஸ்ட் இயக்கம் நாடு முழுமையும் பரவியது. அதேபோல் எதிர்ப் பும் தோன்றியது. சோஷியலிஸ்டுகள் பாசிஸ்டுகளைத் தாக்கி னார்கள். வெளியே சென்ற பாசிஸ்டுகளைத் தாக்கி எப்படி யாவது அக் கட்சியை ஒழிக்க வேண்டுமெனப் பலர் முற்பட்டனர்.

## தேர்தல்

1919 நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் பாசிஸ்ட் இயக்கத்தினருக்கு முழுத் தோல்வி ஏற்பட்டது. ஒருவர்

கூட வெற்றி பெறவில்லை. சோஷியலிஸ்ட் கட்சியினர் என்னும் கம்யூனிஸ்ட் கட்சியினர் நூற்றைம்பது இடங்களைக் கைப்பற்றினர். மக்கள் பாசிஸ்ட்களை இன்னும் நம்பவில்லை. இத் தோல்வியைப்பற்றி சோஷியலிஸ்ட் கட்சியின் இதழான 'அவந்தி' பின் வருமாறு எழுதியது. முசோலினி மிலான் பகுதியில் தேர்தலுக்கு நின்று தோற்றுப் போனார். ஒரு காலத்தில் அவர் ஆசிரியராக இருந்த பத்திரிகை தான் 'அவந்தி.'

'மிலான் பகுதியில் உள்ள நாவிக்லியோ கால்வாயில் சென்ற சில நாட்களுக்குமுன் பிணம் ஒன்று கிடந்ததாம். விசாரித்ததில் அங்க அடையாளங்கள் மூலம் அது முசோலினியின் அரசியல் பிணம் என்று தெரிய வருகிறது'' இப்படி எழுதியது அந்தப் பத்திரிகை. வெற்றியின் போதையில் மயங்கியவர்கள் தோற்றோர் மீது வீசும் வசை மொழிக்கு அளவே யில்லை.

## தபால் நிலையத்தில்

பாசிஸ்ட்கள் மீது எதிர் பிரச்சாரம் நாட்டில் மும்முரமாக நடைபெற்றது. ஒரு நாள் முசோலினி தனக்கு வந்த மணியார்டர் ஒன்றை பெற்றுக்கொள்ள தன் சகோதரருடன் தானே தபால் நிலையத்திற்குச் சென்றார். (வெளி நாட்டிலிருந்துவந்த பணத்தை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்டம் போலும்.) தபால் நிலையத்தில் முசோலினி சம்மந்தப்பட்ட ஊழியரிடம் தன் மணியார்டரைத் தருமாறு கேட்டார். அந்தக் கிளார்க் போல்ஷிவிக் கட்சியைச் சேர்ந்தவன். 'பெனிடோ முசோலினி என்று பெயருடைய யாரையும் எனக்குத் தெரியாது. ஆகவே, பணத்தைத் தர முடியாது' என்று கூறிவிட்டான். உடனே தபால் நிலையத்தில் இருந்த கிளார்க்கள் அனைவரும் முசோ

லினியை அடையாளம் தெரியாதென்று கூறினார்கள். அது மட்டுமல்ல முசோலினியைப்பற்றி கிண்டலாகப் பேசவும் செய்தார்கள். இவர்கள் போக்கைக்கண்ட வயது சென்ற கிளார்க் ஒருவர் அங்கே வந்து "பணத்தைக் கொடுங்கள். முட்டாள் தனமாக நடந்துகொள்ளுங்கள். முசோலினியின் பெயர் இங்கு மட்டுமல்ல எங்கும் பிரசித்தி பெற்றது. ஒரு காலத்தில் உலக முழுமையும் அப் பெயர் தெரியப்போகிறது. உலகம் ஒரு நாள் அப் பெயரின்மீது தன் தீர்ப்பையும் நிச்சயம் தெரிவிக்கப் போகிறது" என்று கூறினார். பணம் முசோலினியிடம் கொடுக்கப்பட்டது.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். நாடெங்கும் பாசிஸ்ட்கள் கொடுமைப் படுத்தப்பட்டனர். கம்யூனிஸ்ட்கள் பாசிஸ்டுகளை தாக்காத நாளே கிடையாது. அவ்வளவு எதிர்ப்பையும் பாசிஸ்ட்கள் தாங்கிக் கொண்டனர். அவர்கள் இயக்கம் இராணுவக் கட்டுப்பாடு உடையது, வீரர்களின் கூடாரம், தன் உயிர் போனாலும், தான் கொடுமைக் காலானாலும் லட்சியத்துக்கு மாசு ஏற்படாது நடந்து கொள்ளும் காளைகள், காலிகள் தாக்கிய போதும், அரசியல் வாதிகள் எதிர்த்தபோதும் பாசிஸ்ட் இயக்கத்தின் மன உறுதி தளராது பணியாற்றும் இயல்புடையவர்கள்.

## காலிகள் இடையே

ஒரு நாள் மிலான் மதுபானக் கடையொன்றில் முசோலினி தன் நண்பர் மைக்கேல் பயான்சி என்பவரின் வரவு நோக்கிக் காத்திருந்தார், அங்கே இருந்த காலிகள் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். முசோலினி மீது வசைமாரி பொழிந்தார்கள். கூட்டம் ஏராளமாக சேர்ந்து விட்டது. சண்டை ஏற்பட்டால் ஹோட்டலுக்குச் சேதம் ஏற்படும் என்று பயந்த அதன் சொந்தக்காரப் பெண்

மணி முசோலினியிடம் சென்று கடையை விட்டு வெளியே செல்லுமாறு கேட்டார். முசோலினி எழுந்து காலிகள் முன்னே சென்றார். இம்மாதிரி பல தடவைகள் அவர் பழக்கப் பட்டவர். காலிகளைப் பார்த்துச் சொன்னார் "எத்தனைத் தானே ஏசுகிறீர்கள் இதோ உங்கள் முன்னே நிற்கிறேன். உங்களுக்கு என்ன வேண்டும். என்னைத் தாக்க வேண்டுமா, இதோ நான் தயார். உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள் ஆனால் நீங்கள் மறுபடியும் வெளியே செல்லும் போது பாதுகாப்புடன் செல்லுங்கள். நீங்கள் பொழியும் வசை மொழிகள் அனைத்துக்கும், என் மீது நடத்தும் தாக்குதலுக்கும் தக்க முறையில் பரிசளிக்கப் படுவீர்கள் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்" என்று. முசோலினியின் இச் சொற்களைக் கேட்ட அங்கே நின்ற மனிதனுக்குக் கூட்டம் தலை குனிந்து நின்றது. அவர் அருகே நின்றவன் ஒருவன் பின் சென்று ஓடினான். அவனைத் தொடர்ந்து காலிகள் அனைவரும் வெளியே ஓடினார்கள். முசோலினிக்கே இப்படி என்றால் அவரது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எப்படித் துன்புற்றார்கள் என்று கூறத் தேவையில்லை. நாட்டிலே மதிப்புடையவன், ஒரு இயக்கத்தின் தலைவன், அதிலும் பலாத்காரத்தில் நம்பிக்கையுடையவன், அவனது குரலுக்கு தங்கள் உயிரையே அர்ப்பணிக்க அங்கே ஆயிரமாயிரம் இளைஞர்கள் தயாராக உள்ளனர், அத் தலைவனுக்கே அந் நாட்டில் வேதனைத் தந்தார்கள். அரசியல் அங்கே அவ்வளவு கீழ்த்தரமாகப் போய் விட்டது. மக்களை நல்ல பாதை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டியவர்கள், மக்கள் உள்ளத்தில் வெறி உணர்ச்சி தோன்றுமாறு செய்தார்கள். அவர்கள் நடத்திய அரசாங்கமோ, மூன்று முறை வீழ்ச்சியடைந்தது. பதவியில் இருந்த நிட்டி (Nitte) என்பவர் மூன்று முறை தன் மந்திரி சபை வீழ்ச்சி

யடைந்தும் வெளியேற மறுத்தார். அவருக்குப் பின் பதவி ஏற்ற கிலோட்டி (Giolitte) என்பவர் நடத்திய அரசாங்கம் மக்கள் மீது தன் கவனத்தையே செலுத்தமறந்து விட்டது.

## மக்கள்

மக்கள் வேதனை தாங்காது துடித்தனர். பிரபுக்கள் கம்யூனிஸ்ட்கள் என்று தங்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப் போகிறார்களோ என்று பயந்து தொழில்களில் பணம் போடாது தொழில் உலகை ஸ்தம்பிக்கச் செய்தனர். விவசாயி, கம்யூனிஸ்ட்டுகள் கூறிபபடி இன்னும் நிலங்கள் அவர்களுக்கு அளிக்கப் படாததால் அவர்களுக்கு சர்க்கார் மீது கோபம் ஏற்பட்டது. 1920–ல் ரயில்வேயிலும், தபால் தந்தி இலாக்காவிலும் மிகப் பெரிய வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. பாசிஸ்ட்டுகள் மீது மக்கள் கவனம் திரும்பியது. சோவியத்தில் கிடைப்பதாகச் சொல்லப் படும் 'சொர்க்க வாழ்வு' தங்களுக்குக் கிடைக்காது என்பதை உணர்ந்தனர். பாசிஸ்ட்கள் கூறிய தேசீய எழுச்சி அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கையைத் தோற்று வித்தது. முசோலினி பலாத்காரத்தின் மூலம் அரசாங்கத்தைக் கைப்பற்ற எண்ணினார். மக்களிடையே கம்யூனிசத்தை நோக்கிச் செல்ல வேண்டுமென்ற உணர்ச்சி பரவுவதை முசோலினி அறிந்தார். லெனின் என்ற பெயர் இத்தாலியர்களிடையே தனக்கே உரித்தான முறையில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. மக்கள் மன்றத்தில் மதிப்பிழந்து வரும் சர்க்காரின் இயந்திரங்கள் கூட நாளுக்கு நாள் சீர் கெட்டுப் போயிற்று. வேணிஸ் நகரம் நோக்கி வந்த விமானம் ஒன்று வெரோனா நகரில் கீழே வீழ்ந்து நொறுங்கியது. இதைக் காரணம் காட்டி விமானப் போக்கு வரத்தை சர்க்கார் நிறுத்திக் கொண்டது. அச்சமயத்தில் தான் முசோலினி விமானம் ஓட்டக் கற்றுக் கொண்டார்.

# வெந்தப் புண்ணில் வேல்

1920 செப்டம்பரில் கம்யூனிஸ்ட்கள் பல தொழிற் சாலைகளைக் கைப்பற்றிக் கொண்டனர் அவர்கள் தங்கள் எதிரியான பாசிஸ்ட்களை அடியோடு தொலைத்து விட முயற்சித்தார்கள். (Mario Sonzine) மாரியோ சன்சினே என்னும் பாசிஸ்ட் தலைவர் ஒருவரை கம்யூனிஸ்ட்கள் துப்பாக்கியால் சுட்டு சாக்கடை ஒன்றில் தள்ளி விட்டார்கள். நவம்பர் மாதம் வெற்றி விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது. பலோன்கா பகுதியில் நகர மண்டபத்தில் நகரசபைக் கூட்டம் நடைபெற்ற போது கம்யூனிஸ்ட்கள் பாசிஸ்ட் உறுப்பினர்கள் மீதும் நகர மண்டபத்திற்கு வெளியே கூடியிருந்த மக்கள் மீதும் குண்டுகளை வீசினர்கள். அச் சண்டையில் லெப்டினன்ட் கயோர்டானி என்னும் பாசிஸ்ட் போர்வீரர் மாண்டு போனர். இவரின் மரணம் முசோலினியின் உள்ளத்தைக் கலக்கி விட்டது.

"நான் இந்த நிலமைக்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று விரும்புகிறேன். பத்திரிகை மூலமாக நாம் எதையும் சாதிக்க முடியாது. பலாத்காரத்தின் மூலமே நாம் வெற்றி பெற முடியும் என்பதை நான் என் நண்பர்களிடம் கூறினேன். ஜனநாயகம் தோல்வி அடைந்து விட்டது. அதற்கு விடை கொடுக்க வேண்டியது தான். தியாகம், போர், ரத்தம் சிந்தல் இவைகள் மூலம் தான் இத்தாலி மறு பிறவி எடுக்கும் என்று உணர்ந்து கொண்டேன். பாசிஸ்ட் இயக்கத்தினரை அழைத்தேன். அவர்கள் கடமையாற்ற வேண்டிய காலம் நெருங்கி வருகிறது என்பதைக் கூறி அவர்களைத் தயார் செய்தேன். அரசியலில் நான் விரும்பிய மாற்றங்களைச் செய்ய சர்க்கார் முன் வரவில்லை. 1921 பிறந்தது. பிளாரன்ஸ் நகரில் கம்யூனிஸ்ட்களின் வெறிச் செயல் அளவு கடந்து விட்டது. பெர்ட்டா (Berta) என்னும்

பாசிஸ்ட் சிறுவன் ஆர்னோ நதியின் பாலத்தின் மீது அமர்ந்திருக்கையில் கம்யூனிஸ்ட்கள் அச் சிறுவனைத் தாக்கிக் கொன்று நதியில் தள்ளி விட்டனர். கம்யூனிஸ்ட்களின் கொலைபாதகச் செயல்களுக்கு அங்கே வீழ்ந்த பிணங்களை எண்ணினால் போதும். மார்ச் 23-ம் தேதி யன்று மிலானில் உள்ள டயானு தியேட்டரில் அவர்கள் வீசிய குண்டினால் தியேட்டரில் அமைதியாக சினிமா பார்த்துக் கொண்டிருந்த இருபது பேர் மரண மடைந்தனர். இது கண்டு நாடு முழுவதும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அவர்களை அழிக்க வேண்டுமென்று இத்தாலி வீறிட்டு எழுந்தது. நான், என் பத்திரிகையை சரியாகப் பயன் படுத்திக் கொண்டேன். பாசிஸ்ட் கட்சினருக்கு உத்திர விட்டேன். எதிரிகளின் போக்கை நன்கு கவனித்தேன். ஒருநாள் யாரோ ஒருவன், மாசி (Masi) என்ற பெயருடையவன் என்னைத் தேடி வந்தான். அவன் என்முன் அமர்ந்தும் அவனால் பேச முடியவில்லை. அவன் முகத்தில் பீதி தோன்றியது. நான், எங்கு வந்தாய்? என்னிடம் உனக்கென்ன வேலை என்று கேட்டேன். அதன்பின் தடுமாற்றத்துடன் தான் என்னைக் கொல்லுமாறு பியோம்பினோவின் பலாத்கார வாதிகளினால் அனுப்பப் பட்டதாகக் கூறி, தான் கொண்டு வந்திருந்த துப்பாக்கியை என் முன்னே வைத்துவிட்டு என்னிடம் மன்னிப்புக் கேட்டான். பின்பு அவனைப் போலீசார் கைது செய்தனர்.''

முசோலினியின் வாழ்க்கையில் முக்கியமான பகுதியை அவர் சொற்கள் மூலமே தந்துள்ளோம். பாசிஸ்ட்கள் 1921-ல் நடைபெற்ற தேர்தலில் பார்லிமெண்டில் முப்பத்தைந்து இடங்களைக் கைப்பற்றினார்கள். கொஞ்ச நாளைக்கு முசோலினி கிலோட்டி மந்திரிசபையை ஆதரித்தார்; பின்பு எதிர்த்தார். 1922 நவம்பரில் ரோம் நகரில் பாசிஸ்ட் மாநாட்டை முசோலினி கூட்டினார். அதே நேரத்தில்

இத்தாலியின் மிகப் பெரிய பாங்கியான பான் கா இத்தாலியானு (Banca Italiana வீழ்ந்தது. பிரான்ஸ்நாட்டின் தென் பகுதியில் உள்ள கான்ஸ் (Cannes) நகரில் நடைபெற்ற நேச தேசங்கள் மாநாட்டிற்கு முசோலினி சென்ருர். அங்கு செல்லும் போது தான் அவருக்கு இத்தாலியின் பொருளாதார நிலை தெரிந்தது. இத்தாலிய நாணயம் பாதிக்கு மேல் மதிப்பிழந்து போயிற்று என்பதை முசோலினி அறிந்து கொண்டார்.

## ரோம் நோக்கி

வெற்றி ஒரு மனிதனைப் பார்த்து எப்போதுமே புன்னகைப் புரிவது கிடையாது. ஒரே ஒரு தடவை தான் ஒவ்வொரு மனிதனுக்கும் அந்த வாய்ப்பு கிட்டும். தனக்கு எப்போது வெற்றி கிட்டும், எந்தச் சூழ்நிலையில் தன்னிடமுள்ள, அல்லது தன்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள, அல்லது தன்னுல், தன்னிடம் சேர்த்து வைக்கப் பட்டுள்ள சக்தியைப் பயன் படுத்தினுல் தனது போராட்டம் வெற்றியடையும் என்பதை உணர்ந்து கொண்டு பணியாற்றும் திறமை யாரிடம் காணப் படுகிறதோ அவர்களுக்குத் தான் தலைவன் என்று பெயரிடுகிறோம். கிடைத்த வெற்றியின் பயனைத் தான் மட்டுமே அனுபவிக்கும் ஒருவரை சுய நல வாதி என்று உலகம் தூற்றும். சிலர் வெற்றி கிட்டியபின் அதை எப்படி காப்பாற்றிக் கொண்டு நீடித்து அதன் பயனைத் தான் எந்தக் குறிக்கோளுக்காகப் போரிட்டோமோ, அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள அனுகூலமாக்கும் மனிதரை தலைவன் என்று மட்டுமல்ல அறிஞர் என்றும் அழைக்கலாம். கிடைத்த வெற்றியை தன் சுயநல நோக்கத்திற்கு உபயோகித்துக் கொண்டோர், தன்னை நோக்கி வந்த சந்தர்ப்பத்தைக் கைநழுவ விட்டோர் அனைவரையும் உலகம் கண்டிக்கிறது. முசோலினி தன்னை நோக்கி சந்தர்ப்பம் வருகிறது என்பதை உணர்ந்து கொண்

டார். பாசிஸ்ட்கள் தங்கள் கடமையைச் செய்யும் நேரம் இது தான் என்று முசோலினி முடிவு செய்தார். நாட்டிலே காணப்படும் அரசியல் கொந்தளிப்பும் மக்கள் எழுச்சியும், பாசிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சியும் தனது போக்குக்கு ஊக்கம் அளிக்கின்றன என்பதையும் முசோலினி உணர்ந்து கொண்டார். நேப்பிள்ஸில் நடைபெற்ற பாசிஸ்ட் காங்கிரசில் முசோலினி தமது கட்சியினர் வெற்றிப் பாதையில் செல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பதை எடுத்துக் கூறினர்.

மாநாடு முடிவடைந்ததும் கட்சியின் முக்கியத் தலைவர்களுடன் கூடிப் பேசினர். பாசிஸ்ட் இயக்கத்தினர் 1921-ம் ஆண்டு அக்டோபர் 28-ம் நாள் சர்க்காரைக் கைப்பற்ற வேண்டியது பலாத்காரமாக என்ற முடிவு ஏற்பட்டது. இத்தாலியின் எல்லா மாகாணங்களிலும் உள்ள பாசிஸ்ட் படை சர்க்கார் அலுவலகங்களைக் கைப்பற்ற வேண்டுமென்று உத்திர விடப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறிப்பிட்ட கட்சியினர் ஆயுதங்களுடன் ரோம் நகரம் நோக்கி செல்ல வேண்டுமென்று உத்திர விடப்பட்டது. முசோலினி ரோமிற்குச் சென்று இத்தாலிய அரசாங்கத்தின் தலைமைக் காரியாலயத்தைக் கைப்பற்றி ஆட்சியை நடத்த வேண்டியது என்று முடிவு செய்தனர்.

நேப்பிள்ஸ் நகரிலிருந்து மிலான் வரும் வழியில் முசோலினி தன் கட்சித் தலைவர்களை மீண்டும் சந்தித்து கடைசி உத்திரவு பிறப்பித்தார். எல்லாம் மிகவும் இரகசியமாகவே வைக்கப்பட்டன. கட்சியின் பொறுப்புக்கள் அனைத்தும் புரட்சிக் கமிட்டி ஒன்றிடம் ஒப்படைக்கப் பட்டது. அக் கமிட்டிக்குத் தலைவராக முசோலினி நியமிக்கப்பட்டார்.

எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்ற பிறகு முசோலினி தன் பத்திரிகையில் கீழ்க் கண்ட பிரகடனம் ஒன்றை வெளியிட்டார்.

## "பாசிஸ்ட் தோழர்களே!! இத்தாலிய மக்களே!!

நாட்டு விடுதலைக்காகப் போரிட வேண்டி தீர்மானிக்கப்பட்ட நேரம் வந்து விட்டது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இதே சமயத்தில் தான் இந்த நாட்டுக்கு வெற்றியைத் தேடித் தந்த தேசியப் போர்ப் படை கலைக்கப்பட்டது. இன்று கருஞ்சட்டைப் படையினர் அந்த வெற்றியை மீண்டும் நாட்டு மக்களுக்கு உரியதாக்க தீர்மானித்து விட்டனர். அந்த நல்லபணியை நிறைவேற்ற ரோம் நகர் நோக்கிப் படையெடுக்க முடிவு செய்துள்ளனர். இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாள் முதல் பாசிஸ்ட் கட்சியின் கொள்கையையும் அதன் செயல் முறைகளையும் ஒன்றாக இணைக்கப் படுகின்றன பாசிசத்தின் இராணுவச் சட்டங்கள் அனைத்தும் இன்றுமுதல் அமல் செய்யப்படுகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். கட்சித்தலைவரின் உத்திரவின் பேரில், கட்சியின் இராணுவ, அரசியல் பொறுப்புகள் அனைத்தும் சர்வாதிகாரத்துடன் இரகசிய கமிட்டி ஒன்றிடம் ஒப்படைக்கப் பட்டது.

நாட்டின் பாதுகாப்பு அரண் போன்ற அரசாங்க இராணுவம் இப்போரில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. மன்னர் விட்டோரியா வெனிடோவின் இராணுவத்திற்கு பாசிசம் என்றும் தன் வணக்கத்தைத் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறது. மேலும் பாசிசம் போலீசாருக்கு எதிராக அவர்களுடன் சண்டையிடப் போவதில்லை. ஆனால் நான்கு ஆண்டுகளாக இந்த நாட்டிற்கு திறமையானதோர் அரசாங்கத்தை அளிக்க முடியாத கோழைகள் நிறைந்த அரசியல் கட்சிகளை எதிர்த்துப் போராடப் போகிறோம் என்னும் உண்மை இதன் மூலம் பிரகடனம் செய்யப்படுகிறது. இந்த நாட்டினுடைய நல் வாழ்வில் அக்கறை கொண்டுள்ள நாங்கள் அரசாங்கத்தில் அமைதி

யையும் ஒழுங்கையும் நிலை நாட்ட விரும்புவதைத் தவிர எங்கள் நோக்கம் வேறெதுவும் இல்லை என்பதை இத்தாலியின் உழைப்பாளி வர்க்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். தொழிற்சாலைகளிலும், அரசியல் நிலையங்கள் மற்றும் சர்க்கார் அலுவலகங்களிலும் ஊழியம் செய்யும் மக்கள் பாசிஸ்ட் சர்க்கார் மீது பயம் கொள்ளத் தேவையில்லை. அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படும். ஆயுதங்கள் இன்றி எங்களை எதிர்ப்போர் மீது நாங்கள் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வோம் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தாலியர்கள் வாழ்க்கையுடன் பிணைக்கப்பட்டிருக்கும் சுமையை அகற்ற பாசிசம் வாளை உருவிக் கொண்டு புறப்பட்டு விட்டது. எல்லாம் வல்ல இறைவனையும் இந்த நாட்டின் மேன்மைக்காகப் போரில் மாண்டுபோன ஐயாயிரம் இத்தாலிய உயிர்களையும் சாட்சிக்கு அழைத்துச் சொல்கிறோம்; எங்கள் உள்ளத்தில் காணப்படும் ஒரே ஒரு துடிப்பு இந்த நாட்டின் மேன்மையும் அதன் பாதுகாப்பும் தான்.

இத்தாலிய பாசிஸ்ட்களே !! உங்களிடையே மறைந்து வாழும் ரோமானிய உணர்ச்சி கொழுந்துவிட்டு எரியுமாக ! நாம் வெற்றி பெற வேண்டும். வெற்றி பெறுவோம்.

**வாழ்க இத்தாலி! வளர்க பாசிசம் !!**

இப்படிக்கு,
புரட்சிக் குழுவினர்.

மேற்கண்ட பிரகடனம் வெளியிடப் பட்டப் பின்னர் இத்தாலியில் சரித்திரத்திலே ஒரு புதிய அத்தியாயம் ஆரம்ப

மாயிற்று. போலீசார் முசோலினியின் பத்திரிகாலயத்தை வளைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்து தோல்வி கண்டனர். இத்தாலிய பாராளுமன்ற உறுப்பினர்களான கோண்டி கிரிப்சி, காபிடானி என்போர் முசோலினியை சந்தித்து சமரசம் பேசினர்—பயன் ஏதும் ஏற்படவில்லை. இதற்குள் இத்தாலியின் பல பகுதிகளில் ஆளும் கட்சியினருக்கும் பாசிச இயக்கத்தினருக்கும் இடையே கை கலப்பு ஆரம்பமாயிற்று. கிரிமோனு, பலோன்கா, அல்சாண்டிரி என்னுமிடங்களில் கலகம் நடைபெற்று இருதரப்பிலும் பலர் மாண்டு போயினர்.

நாட்டின் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த லிபரல் கட்சியினர் செய்வதறியாது திகைத்தனர். முதல் அமைச்சர் பாக்டா (Facta) தன் அமைச்சர்களைக் கலந்து கூட்டாக கீழ்க் கண்ட அறிக்கை ஒன்று வெளியிட்டார்,

'சர்க்காரைக் கவிழ்க்கவும், நாட்டில் குழப்பத்தை உண்டு பண்ணவும் சிலர் தேசத்துரோகமான காரியங்களில் ஈடு படுகின்றனர் என்று தெரிகிறது. இந்த நிலை ஏற்படாது தடுக்க சர்க்கார் செய்த ஏற்பாடுகள் பயன் அளிக்க வில்லை. நாட்டில் அமைதியை நிலை நாட்ட அனைத்தும் செய்துள்ளனர். நெருக்கடியான இந்த நேரத்தில் மக்கள் நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளுகிறோம்.''

நீண்ட நாட்களாக புகைந்து கொண்டிருந்த எரிமலை இப்போது நெருப்பைக் கக்க ஆரம்பித்தது. இத்தாலியின் அரசியலில் ஒரு பெரும் புயல் நுழைந்துவிட்டது. அறிக்கைகள் அதை அடக்கிவிடும் என்று ஆட்சியில் இருப்போர் எண்ணினர். அரசன் அமைச்சர்களை நம்பினன். அமைச்சர்களில் பலர் பீதியினுல் பதவியைவிட்டு வெளி

பேறினார்கள். "என்னை சமாதானப் படுத்த பாசிச இயக்கத்தைப் போன்ற தேசீய கட்சியைப் பதவியில் அமர்த்தினார்கள். நான் பாசிசத்தின் வெற்றி விரைவில் நெருங்கி விட்டது என்பதை உணர்ந்து கொண்டேன். புதிதாக அமைக்கப்பட்ட அரசையும் நான் எதிர்த்தேன். என் அரசியல் எதிரிகள் குழப்பமடைந்தார்கள்; திசைமாறிப் போனார்கள். பேசுவதற்கு சக்தியற்றுப் போனார்கள். பாசிச இராணுவம் ரோம் நகரின் வாயிலில் எனக்காக காத்திருந்தது. நான் சென்றதும் ரோம் நகரில் நுழைய வேண்டியது தான்"- இது முசோலினி தனது போராட்டத்தின் முக்கிய கட்டம் பற்றிக் கூறும் வாக்கியங்கள்.

அக்டோபர் 29-ம் தேதியன்று மாலை மன்னரின் மெய்க் காப்பாளரிடமிருந்து மன்னர் முசோலினியைப் பார்க்க விரும்புவதாகவும் உடனே ரோமுக்கு வருமாறும் டெலிபோனில் அழைப்பு வந்தது — வருகிறேன் என்று ஒப்புக் கொண்டார் முசோலினி. ஆனால் இதே செய்தியை தந்தி மூலமாக மீண்டும் உடனே தெரிவிக்குமாறு மன்னரின் மெய்க்காப் பாளரிடம் கூறினார். ஒருக்கால் டெலிபோனில் வேறு யாரேனும் தவறான முறையில் செய்தி அனுப்பி தன்னை ஏமாற்றி விட்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் முசோலினிக்கு ஏற்பட்டது. மன்னரின் அழைப்பு தந்தி மூலம் அனுப்பப் பட்டது. அந்த அழைப்பில் முசோலினி ரோமிற்கு வந்து மந்திரி சபை அமைக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. நாட்டின் மன்னன் பாசிசத்தின் அதிபன் முசோலினிக்குத் தலைவணங்கிய முதல் நிகழ்ச்சி இது. ஒருக்கால் மன்னன் கோழையின் உருவோ என்னமோ. அன்று அவன் முசோலினியை இரு கரம் கூப்பி அழைத்திருந்தால் முசோலினியின் ஆதிக்கம் வளர

கொஞ்சமேனும் தடை இருந்திருக்கும். அன்பழைப்பு அனுப்பியதன் மூலம் உள் நாட்டுப் போர் ஏற்படுவதை தவிர்த்து விட்டதாக மன்னன் எண்ணினன். முசோலினி தனக்குக் கிடைத்த அழைப்பை தனது பத்திரிகையின் தனி இதழ் மூலமாக இத்தாலியர்களுக்குத் தெரிவித்தார்.

1922-ம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாள் முசோலினி தனது பத்திரிகையை தன் சகோதரன் ஆர்னல்டிடம் ஒப்படைத்து விட்டு மிலானிலிருந்து ரோம் நகரம் சென்றார்.

நாட்டின் பொறுப்பை ஏற்று அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு ஆட்சி புரியுமாறு முசோலினியை மன்னர் கேட்டுக் கொண்டார். மன்னரைப் பேட்டி காணும் போது முசோலினி கருஞ்சட்டை அணிந்திருந்தார். முசோலினி பதவி ஏற்றதும் ரோம் நகரின் வாயிலில் காத்து நின்ற பாசிச இராணுவம் நகரின் உள்ளே அழைக்கப் பட்டது. இத்தாலியின் பல பகுதிகளிலிருந்தும் ரோம் நகரம் நோக்கிச் சென்ற ஒரு லட்சம் கருஞ்சட்டைப் படையினரின் அணிவகுப்பை மன்னர் பார்வையிட்டார். இந்த வீரர்கள் மன்னருக்கு பாசிச இயக்கத்தின் வாழ்த்துக் களைத் தெரிவிக்க வந்திருக்கின்றனர் என்று முசோலினி கூறினர்.

எந்த நிலை ஏற்பட வேண்டுமென்று முசோலினி எண்ணி னரோ அந்த நிலை ஏற்பட்டு விட்டது. புரட்சி நடைபெறும். மக்களில் பலர் மாண்டு போவார்கள். மன்னர் நாட்டை விட்டு ஓடுவார். முசோலினியின் படைகள் பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவர் என்றெல்லாம் பலர் எதிர் பார்த் தனர். ஆனல் ரோம் நகர் நோக்கி வந்த படைகள் மன்ன ருக்கு மரியாதை செலுத்தின. தங்கள் தலைவன் மன்ன ருடன் கை குலுக்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தது.

## வெற்றி !

மன்னன் தன் சொல்லுக்குப் பணியத் தயாராக இருக்கிறான் என்ற காரணத்தால் முசோலினி சர்வாதிகார ஆட்சியை உடனே துவங்கவில்லை. இத்தாலியில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பை உலக நாடுகள் கூர்ந்து கவனித்து வந்தன. நாட்டின் நாணயமோ மதிப்பிழந்து போயிருந்தது. சோம்பேறிகளும், ஏதுமறியாதவர்களும் சுயநல வாதிகளும், சூது மதியினரும் நிறைந்த பாராளு மன்றம் முசோலினியை எப்படிச் சமாளிப்பது, நமக்கு அவர் அடங்குவாரா, அல்லது நம்மை அவர் அடக்கி விடுவாரா என்று பாராளுமன்ற உறுப்பினர்கள் நினைத்தனர். மன்னனோ உயிர் தப்பினேம் என்று இருந்தான். நாட்டு மக்கள், புதிய ஆட்சியின் போக்கு எப்படியிருக்கும் என்று சிந்திக்கத் துவங்கினர். "உயிர் போகுமா, சிறை கிட்டுமா, உள்ள சொத்துக்கள் பறிமுதல் ஆகுமா, வெளியே செல்லலாமா, கூடாதா" என்று எதிர்க்கட்சிக் காரர்கள் மயங்கினர். பாசிச இயக்கத்தின் இராணுவத்தில் மூன்று லட்சம் பேர் இருந்தனர் இனி நமது வேலை என்ன என்று அவர்கள் கேட்டனர். உலகமே முசோலினி வெற்றியடைந்து விட்டார் என்று கூறியது.

பதவிக்கு வந்தவுடன் முசோலினி எதிர்க் கட்சிக் காரர்களின் உயிரும் உடைமையும் காக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார். புரட்சியை நடத்த நியமிக்கப் பட்ட குழுவின் சார்பில் கீழ்க் கண்ட அறிக்கை ரோமில் திரண்டிருந்த இராணுவ வீரர்களுக்கு வெளியிடப் பட்டது.

பாசிஸ்ட் நண்பர்களே!!

நமது இயக்கம் வெற்றியடைந்துவிட்டது. நமது கட்சியின் தலைவர் சர்க்காரின் முழு

அதிகாரங்களும் அடங்கிய பொறுப்பை ஏற்றிருக்கிருர். நமது வெற்றிக்காக உழைத்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்துகிரேும். நம்முடன் நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் மற்ற கட்சியினரையும் பாராட்டுகிரேும்.

இதை விட மிகப்பெரிய தோர் வெற்றியை இத்தாலிப் பாசிஸ்ட்கள் விரும்புகின்றனர். நீங்கள் காட்டிய ஒற்றுமைக்கும், ஒழுங்கு முறைக்கும், உங்களிடையேக் காணப்பட்ட வலிமைக்கும் புரட்சிக்குழு தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. நாட்டின் எதிர் காலத்திற்கு உங்கள் கடமை எதுவோ அதைச் செய்துவிட்டீர்கள்.

அமைதியாக கலைந்து செல்லுங்கள். உங்கள் ஊர் சென்று அமைதியான முறையில் நாட்டிற்கு உழைப்பீர்களாக. இப்போது இத்தாலி அமைதியாக அதன் மக்கள் உழைக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறது. தேவைப்படும்போது உங்களுக்கு அழைப்பு வரும்!

வாழ்க இத்தாலி! வளர்க பாசிசம்!

தான் பதவி ஏற்றுக் கொண்ட செய்தியை முசோலினி சேனைத்தலைவர் டி. அனன்சியோ என்பவருக்கும் தெரிவித்தார். இத்தாலிய சர்க்கார் ஊழியர்களுக்கும் முசோலினி தன் கையெழுத்திட்டு கீழ்க்கண்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பினர்.

"இன்று முதல் நான் மன்னரின் விருப்பத்துடன் சர்க்காரில் பொறுப் பேற்றிருக்கிறேன். சர்க்காரில் ஊழியம் செய்யும் அனைவரும் தங்களுக்கு மேலிடத்திலிருந்து அனுப்

பப்படும் கட்டளைகளுக்குத் தகுந்த முறையில் பணிந்து ஒழுங்காக வேலை செய்ய வேண்டுமென்று கூறுகிறேன்.''

ஊழியர்களுக்கு முசோலினி அனுப்பிய அறிக்கை யிலேயே அவரது எதேச்சாதிகார மனப்பான்மை புலப்படு கிறது என்று பலர் கூறுகின்றனர். தன் உள்ளத்திலே ஏற் பட்டுள்ள முடிவுகளை தைரியமாக எடுத்துச் சொல்ல என்றுமே முசோலினி தயங்கியது கிடையாது. இத்தாலி யின் முதல் அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் அவர் முதல் தடவை பாராளு மன்றத்தில் பேசிய போது பாராளு மன்றம் நிரம்பி யிருந்தது. இத்தாலின் புதிய அரசியல் வாழ்வின் ஆரம்ப விழா அது. ஏராளமான மக்களும் அங்கே கூடியி ருந்தனர்.

நான் உங்களுக்கு ஆரம்பத்திலேயேக் கூறவிரும்புகி றேன். பாசிசத்தின் விருப்பத்தினுல் தான் இங்கே நடை பெற்ற புரட்சி, சட்டத்திற்கும், பொறுமைக்கும் உட் பட்டு நடைபெற்றிருக்கிறது. உணர்ச்சி யற்றவர்கள் பலர் நிரம்பியுள்ள இந்தப் பாரளுமன்றத்தை நான் பிணங்கள் நிரம் பிக் கிடக்கும் இடமாக மாற்றி யிருக்க முடியும். நான் இந்தப் பாராளுமன்றத்தின் கதவுகளை இழுத்து மூடிவிட்டு அவைகளை மீண்டும் திறக்க முடியாதபடிசெய்து இங்கே பரிபூர்ணமான பாசிச சர்க்காரை அமைத்திருபேன். நான் இதைச்செய்திருக்க முடியும், ஆனுல் இன்னும் சிறிது காலத்திற்கு இவைகளைச் செய்வதாத இல்லை.

பாரளுமன்ற உறுப்பினர்களாகிய உங்களிடமிருந்து நான் உழைப்பை எதிர்பார்க்கிறேன். நண்பர்களே! நான் உங்களுக்கு விரோதமாக ஆட்சிபுரிய விரும்பவில்லை.

ஆனால் நீங்களும் உங்கள் பொறுப்புகளையும் உணர வேண்டுகிறேன். நாம் நல்லது செய்ய வேண்டுமென்று நாடு எதிர் பார்க்கிறது. இத்தாலியர்களின் உள்ளத்திலே புது எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. வடக்கு—தெற்கு என்கிற பிரச்சினைகளும் மறைந்து போகின்றன. உங்களுக்குச் சொல்லுகிறேன், அதிகம் பேசாதீர்கள். உங்கள் ஆற்றலை செயலில் காட்டுங்கள், என்று பேசினார் முசோலினி.

பாசிசம் அரியாசனம் ஏறிவிட்டது என்று கூறுவது போன்று காணப்பட்டது. உலகமக்கள் முசோலினியின் பேச்சிலே காணப்பட்ட ஏகாதிபத்திய, எதேச்சாதிகார தொனியைக் கண்டு பலவாறு எண்ணினார்கள். இத்தாலிக்கு ஆபத்து என்றனர் பலர். பாசிசம் பதவிஏறிய காட்சி அல்ல அது. அங்கே பண்பு மறைகிறது என்பதன் பொருள் என்கிறார்கள். கம்யூனிசத்தையும், ஜனநாயகத்தையும் நோக்கி இத்தாலியிலே சவால் விடபட்டிருக்கிறது. காலதேவன் தான் இதற்குப் பதில் அளிக்க வேண்டுமென்றனர் அரசியல் வாதிகள்

## இருபது ஆண்டுகள்

ரோம் நகருக்கு மன்னரால் வருமாறு அழைக்கப்பட்டு, அரச மாளிகையின் உள்ளே நுழைந்த முசோலினி இருபது ஆண்டுகள் இத்தாலிய அரசியல் வானில் மறையாது மின்னிக் கொண்டிருந்தார். ஆட்சி தன் கைக்கு வந்ததும், முசோலினி ஓய்வில்லாது வேலை செய்தார். தனது அரசியல் எதிரிகளை அவர் மக்கள் மன்றத்தில் மதிப் பிழக்கச் செய்து இருபது ஆண்டுகள் அவர் நடத்திய

ஆட்சியை நாம் விவரிப்பது தேவையற்ற தாகும். பாசிசம் பதவிப் பீடமேற வேண்டுமென முசோலினி விரும்பினுர். அது நடைபெற்று விட்டது. முசோலினியின் சர்க்கார் ஏதேச்சாதிகார சர்க்காராக விளங்கியது. இத்தாலியிலே பாசிச இயக்கத்தை யன்றி வேறு அரசியல் கட்சிகள் நிலவ முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

ஆனல் இத்தாலியின் மதிப்பு உலக அரங்கிலே அதிக மாயிற்று. உள்நாட்டுக் குழப்பங்களாலும், அரசியலில் இருந்தோரின் திறமைக் குறைவாலும், சீர்குலைந்து போயி ருந்த இத்தாலியப் பொருளாதாரம் நிலைபெற்றது. பாசிச இயக்கத்தின் முதல் நோக்கமான தேசிய உணர்ச்சி இத்தாலி யர்களிடையே காட்டுத் தீ போன்று பரவியது. உழைப் பின் மேன்மையை இத்தாலியர் உணர்ந்து கொண்டதால் நாட்டிலே பல புதிய தொழில்கள் தோன்றலாயின. இருபது ஆண்டுகள் ஒரே மனிதனுடைய ஆட்சியின் கீழ் அந்த நாடு இருந்ததால், ஆட்சியில் இருப்போர் தாங்கள் விரும் பும் திட்டங்களை நிறைவேற்ற வாய்ப்பு பெற்றிருந்தார்கள். யாராலும் மதிக்கப்படாது இருந்த இத்தாலி முசோலினியின் ஆட்சியில் உலக வல்லரசுகளில் ஒன்ருக உருப் பெற்றது. வல்லரசு நாடுகள் இத்தாலியுடன் நட்பை விரும்பின. பிரிட் டன் இந்தப் புதிய எதிரியை சந்தேகக் கண்களுடன் நோக் கியது.

உலகில் இத்தாலியின் மதிப்பு உயர்ந்து கொண்டிருந்த அதே நேரத்தில் உள் நாட்டில் முசோலினி தனது பாசிசத் திட்டங்களைப் பரிட்சை செய்யத் துவங்கினுர். இத்தாலி யின் மத்திய சர்க்காரின் கரங்கள் வலுப் படுத்தப் பட்டன. மாகாணங்களின் அதிகாரங்கள் குறைக்கப் பட்டன. தனி

மனிதனின் உரிமைகள் வெளிப் படையாக மறுக்கப்படா விட்டாலும், அந்த உரிமைகள் சர்க்காரின் கட்டுப் பாடு களால் சிறிது சிறிதாக மக்களினின்றும் பிரிக்கப் பட்டன. வலிமை பெருந்திய மத்திய ஆட்சி, அந்த ஆட்சியை நடத்திச் செல்லும் பாசிஸ்ட் இயக்கம், அந்த இயக்கத்தைக் காத்து நிற்கும் கருஞ் சட்டை இராணுவம் இவையனைத் தும் இத்தாலியக் குடிமகனின் உள்ளத்தில் விவரிக்க முடியாத பயத்தை உண்டு பண்ணி. அவன் மனதில் நாடு, அதன் வாழ்க்கை, உயர்வு என்ற எண்ணங்கள் மட்டுமே இருக்கும் நிலையை உண்டு பண்ணின. தனது உரிமைகள் பறிக்கப் பட்டுப் போனாலும். தன் கண் எதிரே பல புதிய தொழிற்சாலைகள் தோன்றியிருப்பதையும் கண்ட இத்தாலி யக் குடிமகன், 'வாழ்க பாசிசம்!' என்று உரக்கக் கூச்ச லிட்டான். குடிமகனின் உள்ளத்திலே தோன்றியுள்ள தேசிய உணர்ச்சியை முசோலினி நன்கு பயன் படுத்திக் கொண்டார். அதிகாரம் அவருக்கு ஆணவத்தை அளித்தது. பாசிஸ்ட் இயக்கத்திலே அவருக்கு இருந்த மதிப்பு, முசோலி னியை சர்வாதிகார மனப்பான்மை கொண்ட மனிதனாக மாற்றி விட்டது.

1931–ஆம் ஆண்டிலே முசோலினி போப் ஆண்டவர் இத்தாலிய அரசியலில் கொண்டிருந்த பிடிப்பை விலக்கினார். வாடிகன் நகரம் ரோம் நகரத்து ஆட்சியில் விளையாட இய லாது தடுத்து விட்டார்.

•

ஆனால் முசோலினியின் உள்ளத்திலே அவர் பிறப்பு முதலே கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த ஆதிக் கத் தீ முசோலினியை இட்லர் போன்றோரின் வரிசையில் வைத்து எண்ணுமாறு செய்து விட்டது.

1936–ஆம் ஆண்டில் பிரிட்டனின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது எதியோப்பியாவை முசோலினி தன் வயப் படுத்திக் கொண்டார். முசோலினியின் வாழ்விலும் அன்றிலிருந்து வீழ்ச்சிப் படலம் ஆரம்பித்து விட்டது. 1938-ஆம் ஆண்டில் பாசிசத்தின் தலைவன் முசோலினியும், நாசிசத்தின் அதிபன் இட்லரும் கைகோர்த்து நடக்க வாரம் பித்தனர். போர் வெறி பிடித்து இருவரும் தங்கள் அழி விற்குத் தாங்களே வித்திட்டுக் கொண்டார்கள். இரண்டா வது உலகப் போரின் முடிவு முசோலினியை அரசியல் உல கிலிருந்து வெளியேற்றி விட்டது எனலாம். 1940--ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் படையினால் இத்தாலி தனது ஆப் பிரிக்க காலனியை இழந்தது. காலம் மாறியது. இத்தாலி யின் விடிவெள்ளி என்று கருதப்பட்ட முசோலினி இத் தாலிய மக்களின் விரோதி என்று கருதப்பட்டார். இட்லரின் கைப்பாவையாக மாறிவிட்ட முசோலினியின் ராஜ தந்திரம் வெற்றி யடையவில்லை.

1943–ஆம் ஆண்டில் இருபது ஆண்டு காலமாக தன் னிடம் இருந்த அதிகாரங்கள் அனைத்தையும் முசோலினி இழந்தார். இத்தாலி நேச நாடுகளினால் வெல்லப்பட்டது.

## ஒளிந்து வாழ்ந்தார் !!

மூன்று லட்சம் பாசிஸ்ட் வீரர்களின் அணிவகுப் புக்குத் தலைமை தாங்கிய முசோலினி இன்று தோல்வி அடைந்து இத்தாலியின் வட கோடியில் பொம்மை சர்க் கார் ஒன்றை அமைத்து "நான் தான் இத்தாலியின் தலைவன்" என்று கூறிக் கொண்டிருந்தார். 1945–ஆம் ஆண்டு எப்ரல் திங்களில் இத்தாலியர்கள் பலர் முசோலினி

யைச் சுட்டுக் கொன்று விட்டார்கள். யாருடைய வாழ்வு மலர வேண்டுமென்று முசேலீனி தனது வாழ்நாள் முழு மையும் செலவிட்டாரோ, அதே நாட்டு மக்கள், அவரைக் கொன்று விட்டனர் — குதூகலித்தனர்.

## பிணம்.

முசோலினி பெருமையுடன் வாழ்ந்து வந்த மிலான் நகரில் அவரது பிணம் இருபத்து ஏழுகுண்டுக் காயங் களுடன் இழி நிலையில் கிடத்தப் பட்டுக் கிடந்ததாம். நாட்டுக்காக நல்ல முறையில் உழைத்தவர்கள் பலருக்குப் பரிதாபகரமான முடிவு ஏற்பட்டிருக்கிறது. நானிலம் முசோலினியை நல்லவன் என்று ஒப்புக் கொள்ள வில்லை. ஆனால் முசோலினி யிடத்திலும் சாதாரண மனிதனிடம் காணப்படாத சில நல்ல பண்புகள் காணப்பட்டன. சரியோ தவறோ அவர் கூறிய கொள்கை இத்தாலியர்களின் வாழ்வுக்குப் பயன் அற்றதாக இருக்கலாம் ஆனால் இருபது ஆண்டுகள் நாட்டின் அதிகார பீடத்தில் இருந்தவர் என்ற நிலைக்கு இரங்கியாவது அவரது முடிவுக்கு இத்தாலிய மக்கள் திட்டமிட்டிருக்கலாம். கொலை பாதகர்கள் கூட சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட காலம் நாட்டு மக்களின் தலைவனாக இருந் தவரை கண்டோர் பார்த்து நகைக்குமாறு அவர் பிணத்தை நடுத் தெருவிலே வீசி எறிந்து விட்டார்கள். தன்னுடைய நாட்டிலே உற்பத்தியாகும் பொருள்கள் விலை போக வேண்டு மென்பதற்காக உலகில் போரை மூட்டி மக்களின் உயிரைக் குடிக்கும் ஏகாதிபத்திய வெறியர்கள் பலருக்கு உலகம் சிலை அமைத்து அவர்களை எல்லாம்

இராஜ தந்திரிகள் என்று அழைக்கிறது. முசோலினிக்கு. அவர்களுக்குக் கிடைத்த மரியாதை கூட கிடைக்க வில்லை. நாகரீக உலகு இப்படி நாட்டு மக்களுக்குத் தேவையற்ற கொள்கையைச் சொல்லி, மக்களின் உரிமைகளைப் பறித்து சர்வாதிகாரம் செய்யும் அரசியல் வாதியை சுட்டுக் கொல் வதை விரும்பவில்லை என்றாலும் அன்று முசோலினியின் பிணத்தை மிலான் நகரில் கண்ட பலர் 'ஒழிந்தான் மமதை யாளன்' என்று நீண்டதோர் பெருமூச்சு விட்டார்களாம். மனித இதயம் மிகவும் பொல்லாதது என்கிறார்களே அது உண்மைதானே !

## தோல்வி!

வீரர்கள், பொது நலவாதிகள் என்போரின் வாழ்க்கை வரலாறு கதையும், அறிஞர்களின் சரிதங்களையும் படிப் பதிலே உலகம் மிகவும் விருப்பமுடன் காணப் படுகிறது. ஆனால் உலக சரித்திரத்திலே இடம் பெற்று மக்களின் பாராட்டுதலுக்கு ஆளாகாமல், ஏசுதலுக்கும், வெறுப்புக் கும் ஆளான மக்களின் வாழ்வைப் பற்றி உலக மக்கள் அவ்வளவு கவலைப் படுவது கிடையாது. உத்தமர்கள், உலகின் பாதுகாவலர்கள், அன்பின் பிறப்பிடம், அற நெறியின் தோழன் என்று பெயர் பெற்ற மனிதர்களின் வாழ்க்கையில் மட்டுமே புனிதத் தன்மையும், போற்ற வேண்டிய பண்புகளும் இருப்பதாக உலக மக்கள் எண்ணு கிறார்கள். அறிஞர்கள், சிந்தனையாளர்கள் என்னப்படு வோரிடம் காணப்படும் குறைபாடுகளுக் கூட உலகம் புதிய பொருளைக்கூற முன் வந்து விடுகிறது. அவர்களில் சிலரிடம் காணப்படும் தீய நோக்கமுடைய செய்கைகள் மன்னிக்கப் படுகின்றன. ஆனால் வாழ்க்கையில் தோல்வி

கண்ட மக்கள் தலைவனை உலகம் நினைப்பதும் கிடையாது. ஆனால் அவர்களும் உலக சரித்திரத்தில் சில ஏடுகளை நிரப்புகிறார்கள் அவர்களுக்குக் கிட்டிய தோல்வி ஊருக்கு உழைப்போரின் கண் முன்னே நின்று, 'மக்கள் சேவை என்ற பெயரில், சுய நலத்திற்கும், சர்வாதிகாரத்திற்கும் இடம் கொடுக்கிறதே' என்று கூறிக் கொண்டிருக்கிறது.

முசோலினி ஏழையின் மகனாகப் பிறந்தார் ஏழைகள் நிறைந்த இத்தாலியின் உயர்வுக்கு என்று உழைத்தார். உலகிற்கு புதிய கொள்கை ஒன்றை தந்து பாசிசம் என்ற பெயரையும் அதற்கு இட்டார் உலகம் அவரது உழைப்பையும் பாராட்ட மறுத்து விட்டது அவரது கொள்கையையும் பயன் அற்றது என்று தீர்ப்பளித்து விட்டது. ஏழைகளின் தோழன் என்று முசோலினி தன்னைக் கூறிக் கொண்டார். அதே ஏழைகள் தான் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

முசோலினியின் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி பாசிசத்தின் தோல்வியாக முடிந்துவிட்டது. முசோலினியின் பிணம் எவ்வாறு அனாதைப் பிணம் போன்று மிலான் நகரின் தெருவில் கிடந்ததோ அதே போன்று அரசியல் தத்துவங்களின் இடையே பாசிசம் இன்று அனாதைப் போல் கேட்பாரற்று கிடக்கிறது.

பாசிசம், ஜனநாயகம் என்ற கொள்கைக்கு முரண்பட்ட புதிய அரசியல் தத்துவம். ஜன நாயகத்தில் தனி மனிதனுக்கு அதிக மதிப்பு உண்டு—தரப்பட வேண்டும் பாசிசம் வலிமைமிக்க கூட்டு மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் மனிதன் வாழ வேண்டும் என்று கூறுகிறது. பாசிசம் தனி மனிதனின் உரிமைகளை மதிப்பது கிடையாது. தனி

மனிதனின் உரிமைகளை நாட்டின் மேன்மைக்காக தியாகம் செய்ய வேண்டுமென்று கூறும் கொள்கை பாசிசம். ஜன நாயக நாட்டிலே பிறந்தோர் அனைவரும் வாழலாம். ஜன நாயகம் அனைவரின் வாழ்வையும் உயர்த்த விரும்பும் அரசியல் தென்றல். பாசிசம் நாட்டிலே வலிமை மிக்கவனுக்குத் தான் வாழ்வு (Survival of the strong) என்று கூறும் அரசியல் புயல்.

இந்தப் புயல் தான் இத்தாலியில் இருபது ஆண்டு காலம் வீசியது. முசோலினியின் உள்ளத்திலே உருவாகிய புயல் அவரது இதயம் உலர்ந்து போனதும் பாசிசப் புயலும் அடங்கி விட்டது.

* * *

உலகில் அப்புயல் மீண்டும் தோன்றுது என்று பலர் நம்புகின்றனர். ஆனால் பாசிசம் மறு உருவில் மக்கள் மன்றம் நோக்கி வராது என்று வருங்கால சரிதம் தான் கூற வல்லமை உடையது.

---

109049

# Books of Refrence.


1. MY AUTOBIOGRAPHY.
BENITO. MUSSOLINI

2. The Life of Benito mussolini
BY
MARGHEERITAG. SARFATTI
(English Translation)

3. Facism.
BY
GIVSPPE PREZZOLINI
(English Translation)

4. The New modern Encyclopedia.
Wise & CO.,

5. Encyclopedia Britanica.

9C
101